# மாவை ஆலயத்துக்குள் சென்று வணங்க இவர்களுக்குத் தடை விதிக்கக் கூடாது

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்:173
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 20 ஜ: அவ் 19 திங்கட்கிழமை [4-8-69]

**முக்கிய அறிவித்தல்**

எங்கள் ஸ்தாபனத்தில் முன்பு கடமைபுரிந்த சிலர் போலி சோப்புகளை தந்து ஏமாற்றுவதாக அறிந்தோம். தயவுசெய்து எங்கள் லேபல்களை கவனித்து எங்கள் விற்பனை வாகனங்களில் வாங்கி வழமைபோல் ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

**மில்க்வைற்சோப் தொழிற்சாலை**
**யாழ்ப்பாணம்.**

## யாழ். மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாநகரசபைபொறியியல் நிபுணரான திரு இ. வைத்திலிங்கம், நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலகர் சபைத் தலைவரான திரு. மு. பூபாலசிங்கம், புத்தூரைச் சேர்ந்த சி. மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் உள்வீதிக்குள் சென்று வணங்க கோவில் கதவுகளைத் திறந்துவிட வேண்டுமென்றும், இவர்கள் ஆலய தரிசனம் செய்ய எந்தத்தடையும் விதிக்கக்கூடாதென்றும் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் தாம் சென்று வணங்கிவந்ததாகவும், தாம் ஆலய தரிசனம் செய்ய கோவில் கதவுகள் திறந்துவிடவேண்டுமெனவும் கோரி இவர்கள் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட பின்னரே யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மாயில் இந்தத்தற்காலிக உத்தரவை வழங்கினர்

யாழ்ப்பாணம்திவ்யஜீவன சங்கப்பொருளாளரும், நாவலர் விழாப் பிரமுகரும், யாழ். மாநகரசபைப் பொறியியலாளருமான திரு. இளையதம்பி வைத்திலிங்கம், நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலனசபைத்தலைவரும், அகிலஇலங்கை சைவஅனுட்டான பாதுகாப்புச் சபை முன்னாள் உபதலைவரும், பிரபல வர்த்தகரும், சமாதான நீதவானுமான திரு. முருகேசு பூபாலசிங்கம், புத்தூர் சைவ வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவரும், உள்ளூராட்சி சபை ஓவசியருமான திரு. சின்னத்தம்பர் மாணிக்கவாசர் ஆகிய மூவரும்இம் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார்கள்'

தாங்கள் இந்துக்களென்றும், சென்ற 25 வருடகாலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உள்வீதிக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்துவந்திருப்பதாகவும், கோவில் பொதுச்சொத்தென்றும் வழமைக்கு மாறாகக் கோயில் தர்மகர்த்தா கதவைப் பூட்டி, எல்லோரையும் வெளியே

4-ம்பக்கம் பார்க்க

### நான்காவது தினமாக வேலைநிறுத்தம் தொடர்கிறது

# யாழ்.பஸ்நிலைய அலுவலகத்துக்கு எறிகுண்டு வீசப்பட்டது

## கோண்டாவில் டிப்போவில் மின்சாரம் துண்டிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பஸ் நிலைய அலுவலகத்திற்கு நேற்று முன்தினமிரவு எறிகுண்டு வீசப்பட்டதால் அலுவலகத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது. கோண்டாவில் டிப்போவின் மூன்றுமின்சாரத் தொடர்புகளில் இரண்டு தொடர்புகள் சில விஷமிகளால் கடந்த இரவு துண்டிக்கப்பட்டன. மின் சாரக் கம்பிகளுக்கு சங்கிலி எறிந்து துண்டிக்கப்பட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசாருக்கும் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### மூன்றுவது நாள்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய மூன்று இ.போ.ச. டிப்போக்களையும் சேர்ந்த சாரதிகளும், கண்டக்டர்களும் நேற்று மூன்றுவது தினமாகத் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

### இன்று காலை பேச்சுவார்த்தை

வேலை நிறுத்தத்தைக்

கொடுத்ததாகவும் இதனாலேயே பேச்சுவார்த்தை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டதாகவும் பிராந்திய இ போ. ச முகாமையாளர் திரு.வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

வேலைநிறுத்தத்தை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு யாழ். மேயர் திரு எஸ். நாகராஜா நேற்றுமாலை அமைச்சர் திரு சு. த தாசாவுக்கு அவசரத் தந்தியொன்று அனுப்பி வைத்தார்.

வேலைநிறுத்த ஊழியர்களை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய

இன்று

### அமைச்சரிடம் மகஜர்சமர்ப்பிப்பர்

புலோலி, திங்கள்

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட பிரசவ வார்ட்டை இன்றுமாலை சுகாதார அமைச்சர் திறந்துவைக்கும்போது பொதுமக்கள் மகஜர் ஒன்றைத் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்பத்திரி சீர்கேடுகள் பற்றி இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

நெலலியடி மத்திய மகா வித்தியாலயத்தில வடமராட்சி சுகாதார பரிசோதகர்கள் கூட்டப்படும் கூட்டமொன்றில் அமைச்சர் கலந்துகொள்வார். உபசபா நாயகர் திரு. மு, சிவசிதம்பரமும் கலந்துகொள்வார்.

கல்லூரிக்குச்சென்ற

### எட்டுவயதுச் சிறுவன் கார் மோதி மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

அண்ணனுடன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த எட்டு வயதுச் சிறுவன் கார் மோதியதால் துடிதுடித்துமரணமானர். இந்தப் பரிதாப சம்பவம் நேற்றுக்காலை நீர்வேலிச் சந்தியில் நடந்தது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவனை அமிர்தலிங்கம் பகீரதன் என்பவரே இவ்வாறு மரணமான மாணவர் ஆவார்.

அண்ணனுடன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த இச்சிறுவனை வீதியால் வந்த கார் ஒன்று மோதியதாகவும், சிறுவன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிககு எடுத்துச் சென்று அனுமதிக்கப்பட்டபோது மரணமாகி

கார்ச் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். விபத்து நடந்த இடத்தில் தேடுவாரற்று நின்ற கார் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் விசாரணை நடாத்திவருகின்றனர்.

கா. நி.)

### கோரிக்கை

அளவெட்டி, திங்கள்

மாவிட்டபுரம் புகையிரத நிலைய மேடையை உடன் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கும்படி திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகத்தைதமிழரசுக் கட்சியின் தெல்லிப்

உள்ளூராட்சி மன்றங்களிடம்

## தீண்டாமை ஒழிப்புக்கு ஆதரவுகோரி மகஜர்

சுழிபுரம், திங்கள்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சுற்றுநிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

தீண்டாமை ஒழிப்பு ஆலயப் பிரவசம் சம்பந்தமான சமூகக் குறைபாடுகளைநீக்கும் சட்டத்திலுள்ள குறைபாடுகளை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டி திருத்தம் செய்யுமாறு கோரும் தீர்மானங்களை நிறைவேற்றி நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்கத்தைக்கேட்குமாறும், மகாசபை எக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு நல்குமாறும் இவர்கள்சுற்றுநிருபம் மூலம் சகல உள்ளூராட்சி மன்றங்களிடம்கேட்டுள்ளனர். சுற்று நிருபத்தின் பிரதிகள் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஜெர்மன் சமஷ்டி குடியரசு நன்கொடை

கொழும்பு, ஞாயிறு

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு 3 கோடி 70லட்சம் ரூபாவை இலங்கைக்குக் கடனாக வழங்கும். இதற்கான ஒப்பந்தம் இன்று கொழும்பில் கைச்சாத்தானது.

பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி.வி.பி.சமரசிங்கவும், ஜெர்மன் குடியரசின் சார்பில் திரு. கொக்மனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்தக் கடனை 30 வருடங்களின் தவணையில் தீர்த்துக்கொள்ளலாம். இதில் 2கோடி 20 லட்சம் ரூபா கைத்தொழில் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்படும்.

## அடுத்த வருட அரசாங்க வங்கி விடுமுறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகளில் இரண்டு தொடர்புகள் சில விஷமிகளால் கடந்த இரவு துண்டிக்கப்பட்டன. மின் சாரக் கம்பிகளுக்கு சங்கிலி எறிந்து துண்டிக்கப்பட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து பஸ் நிலையங்களிலும், பஸ் டிப்போக்களிலும் ஓடும் பஸ்களிலும்பலத்தபொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு சகல இடங்களிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல்புரிகின்றனர், அரசாங்க உடமைகளுக்குச் சேதம் விளைவிப்பவர்களை உடன் கைது செய்யுமாறு சகல

நேற்று மூன்றுவது தினமாகத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

## இன்று காலை பேச்சுவார்த்தை

வேலை நிறுத்தத்தைக் கைவிடச் செய்வதற்காக நேற்று மாலை நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை கடைசியில் இன்று காலை 10 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சி சார்பு தொழிற்சங்க பிரமுகர்களும், உபசபாநாயகர் திரு.எம்.சிவசிதம்பரமும் மட்டுமே நேற்றுச் சமூகம்

மேயர் திரு எஸ். நாகராஜா நேற்றுமாலை அமைச்சர் திரு சுததாசாவுக்கு அவசரத் தந்தியொன்று அனுப்பி வைத்தார்.

வேலைநிறுத்த ஊழியர்களை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய யாழ். நகர உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தேசிய சேவை அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

## கத்தி முனையில் கொள்ளை

மீதோட்டமுல்லை, திங்கள்

கொழும்பில் பிரலபவர்த்தகரான திரு. சிரிவர்த்தன என்பவரிடம் இருந்து பட்டப்பகலில் மாலிகாவத்தைச் சந்தியில் வைத்து கத்திமுனையில் ரூபா 4,500 வழிப்பறிக் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் வர்த்தக விஷயமாக காரில்சென்றுகொண்டிருந்த திரு. சிரிவத்தனவை மாலிகாவத்தைச் சந்தியில் வழிமறித்த சிலர் தன்னைக் கொன்று விடுவதாக கத்தியைக்காட்டி பயமுறுத்தி தனது பணத்தை அபகரித்துச்சென்று விட்டதாக தெமட்டக் கொடைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதன்காரணமாக பொலிசார் தெமட்டக்கொடையைச் சேர்ந்த திரு காதர், திரு. நூர்டீன், திரு. தர்மி ஆகியமூவரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து பதின் நான்கு நாள்றிமாண்டில் வைத்துள்ளனர். (வி.நி)

பட்டுள்ளதாம்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில வடமராட்சி சுகாதார பரிசோதகர்கள் கூட்டப்படும் கூட்டமொன்றில அமைச்சர் கலந்துகொள்வார். உபசபாநாயகர் திரு. மு, சிவசிதம்பரமும் கலந்துகொள்வார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அண்ணனுடன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த இச்சிறுவனை வீதியால் வந்த கார் ஒன்று மோதியதாகவும், சிறுவன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிககு எடுத்துச் சென்று அனுமதிக்கப்பட்டபோது மரணமாகிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டி, திங்கள்

மாவிட்டபுரம் புகையிரத நிலைய மேடையை உடன் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கும்படி திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தைதமிழரசுக் கட்சியின் தெல்லிப்பளைக்கிளை கோரியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி.வி.பி.சமரசிங்காவும்,

20 லட்சம் ரூபா கைத்தொழில் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்படும்.

# அடுத்த வருட அரசாங்க வங்கி விடுமுறைகள்

கொழும்பு, திங்கள்

1970-ம் ஆண்டுக்கான அரசாங்க வங்கி விடுமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி-1 தேசிய தலைவர் தினம், ஜனவரி-14 தைப்பொங்கல் பெப்ரவரி-4 சுதந்திரதினம், பெப்ரவரி-17 ஹஜ்பெருநாள், மார்ச்-6 மகாசிவராத்திரி, மார்ச் 27 பெரிய வெள்ளி, மார்ச்-29 ஈஸ்டர்ஞாயிறு, ஏப்ரல்-13 சிங்கள தமிழ் புதுவருடத்துக்கு முந்திய நாள், ஏப்ரல் 14 தமிழ் சிங்கள புதுவருடம், மே-1 மேதினம், மே 18- நபிகள் பிறந்த தினம், மே-21 சிங்கள வைகாசி பூரணைக்கு அடுத்து வரும் தினம், ஜுன்-30 விசேஷ வங்கி விடுமுறை, அக்டோபர்-29 தீபாவளி, டிசம்பர்-1நோன்பு, டிசம்பர்-25 நத்தார் டிசம்பர் 31-விசேஷவங்கி விடுமுறை.

# அரசாங்க அதிபரின் உறுதியின்பேரில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

சைவ ஆலயங்களில் சமத்துவமான வழிபாட்டு உரிமை கோரி யாழ்ப்பாணம் கச்சேரிமுன்னால் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த ஐவர் நேற்றுமுன் தினம் ஆரம்பித்த சாகும் வரையான உண்ணாவிரதத்தை நேற்றிரவு 7 மணிக்குக் கைவிட்டனர்.

பிரதம மந்திரிதிரு. டட்லி சேனநாயக்கா சார்பில் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் சி. பீட்டர்ஸ் உண்ணாவிரதமிருந்தவர்களிடம் கொடுத்த கடிதம் ஒன்றைத் தொடர்ந்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

அரசாங்க அதிபரால் ஒப்பமிடப்பட்ட அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டத்திலுள்ள குறைபாடுகளை சீரமைப்புச் செய்து சரிப்படுத்த கௌரவ பிரதம மந்திரி பரிசீலனை செய்வார் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இதுசம்பந்தமாக நீங்கள் எவ்வித ஆலோசனை தெரிவிக்க விரும்பினாலும் அவற்றைப் பிரதமர் ஆராய்வார்.

நீங்கள் நேரில் பிரதமரைச் சந்தித்துஅவருக்கு இதுசம்பந்தமாக உங்களது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை அவருடன் தொடர்புகொண்டு நான் ஏற்படுத்தித் தருவேன் என்பதையும் உங்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

அரசாங்க அதிபர் சிறுபான்மைத்தமிழர் மகாசபைச் செயற்குழுவை நேற்று மாலை தனது இல்லத்துக்கு அழைத்து இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே உண்ணாவிரதக்காரரைச் சந்தித்துப் பிரதமர் சார்பில் கடிதத்தைக் கொடுத்தார்.

யாழ்ப்பாணம்மேயர் திரு எஸ். நாகராசா உண்ணாவிரதகாரர்களின் மூன்று அம்சக் கோரிக்கையையும் பிரதமர் உடனடியாக கவனத்துக்குஎடுத்துக் கொள்ள வேண்டுமென்று பிரதமருக்கு அறிவித்திருந்தார்.

வட்டுக்கோட்டை எம்.பி திரு. அ. அமிர்தலிங்கம், மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு.வி. பொன்னம்பலம் உட்பட பலபிரமுகர்களும் இவர்களை நேற்றுச் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்தினர்.

உண்ணாவிதரமிருந்த திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், எஸ். செல்லையா எஸ். இராசையா கே. தவஞானம், என். எஸ். அப்புத்துரை ஆகிய ஐவருக்கும் நேற்றிரவு மகாசபை காரியாலயத்தில் உபதலைவர் திரு.எம். செல்லையா தலைமையில் வரவேற்புஅளிக்கப் பட்டது. (கா.நி)

## இன்றுவரும் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், திங்கள்

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு சுகாதா. அமைச்சர் திரு. ஈ. எல் சேனநாயக்கா இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்ருர்

இன்று காலை தூதுக்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அமைச்சர் இன்று மாலை நெல்லியடி சுகாதாரப் பொருட்காட்சியையும், மந்திகை ஆஸ்பத்திரி பிரசவ விடுதியையும் திறந்துவைப்பார் நாளை காலை கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் பிரசவ விடுதியைத் திறந்து வைத்தபின் நாளை மாலையே கொழும்பு திரும்புவார். (கா. நி.)

# 'சிவியாதெரு' பெயர்மாற்ற

## உள்நாட்டமைச்சர் உத்தரவு

யாழ்ப்பாணம், திங்கள்

'சிவியாதெரு' என்று அழைக்கப்படும் கிராம சேவையாளர் பகுதி உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயககாவின் உத்தரவைத் தொடர்ந்து 'அரியாலைப் பகுதி' என்று பெயர்மாற்றப்பட்டுள்ளது.

ஒரு சாதியின் பெயரால் இப்பகுதி அழைக்கப்படுவது அப்பகுதி மக்களைப் புண்படுத்துவதாக இருப்பதாக நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் உள்நாட்டமைச்சருக்கு அறிவித்திருந்ததைத் தொடர்ந்தே பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அத்துடன் இக்கிராம சேவையாளர் பிரிவு அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு என இரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது, அக்டோபர் முதலாம் திகதி முதல் இங்கு இரண்டுகிராம சேவையாளர்கள் கடமையாற்றுவார்கள். (கா-நி)

# 'ஒருகையால் கொடுத்து மறுகையால் வாங்குகிறது'

## 'பட்ஜட்' பற்றி ஶ்ரீமாவோ

கோட்டை, ஞாயிறு

பொது மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்திஞல் ஒரு பிரயோசனமுமில்லை. அவர்களுக்குஆறுதல் அளிக்கவில்லையென்றே கூறலாம். இவ்வரவு செலவுத் திட்டத்தால் வாழ்க்கைத் தரம் இன்னும் உயர்ந்து கொண்டே போகும். அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை அரசாங்கம் உயர்த்தக் கூடும். ஆனுல் அரசாங்கம் என்ன செய்கிறதெனில் ஒரு கையால் கொடுத்து மறுகையால் வாங்குகிறது'

எதிர்கட்சித தலைவி திருமதி ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கா வரவுசெலவுத்திட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி ஆரம்பித்து வைத்த கூட்டுஸ்தாபனங்களிடமிருந்தே இன்று தேசிய அரசாங்கம் தனது வரவு செலவு திட்டத்தைச் சீர் செய்ய கடன் வாங்குகிறது. உண்மையில் இந்த அரசாங்கம் சுதந்திரக்கட்சி ஆரம்பித்து வைத்தவைகளிலிருந்தே நன்மையடைகிறது. உலக வங்கியின் அனுசரணையுடனேயேஇந்தவரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதென வதந்திகள் நாட்டில நிலவுகின்றன எனவும் திருமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

# செவ்வாய்க்கிரகத்தின் படங்களை

## மெரினர்-7 அனுப்பத் தொடங்கியுள்ளது

### தண்ணீர் தென்படுவதாக அறிகுறி

ஹுஸ்டன், ஆக. 3

செவ்வாய்க்கிரகத்தை நோக்கி அமெரிக்கா செலுத்தியுள்ள மரீனர்-7 ஆளில்லா செயற்கைக் கிரகம் படங்களைப்பூமிக்கு அனுப்பத் தொடங்கிவிட்டது.

செவ்வாய்க்கிரகத்திலிருந்து சுமார் 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவிலிருந்து இப்படங்களை செயற்கைக்கிரகம் பதிவு செய்தது.. இப்படங்கள் டென்னிஸ் பந்துபோல் அக்கிரகத்தின் தோற்றத்தைக் காட்டுகின்றன. செவ்வாய்க்கிரகத்தின் அருகில் சென்று மரீனர்-7 படங்களைத் தொடர்ந்து அனுப்பும் என்று கூறப்படுகின்றது.

இச்செயற்கைக் கிரகத்தின் சில விசைகள் பழுதடைந்துபோயிருக்கின்றன. இவைககளை பூமியிலிருந்தே திருத்துவதில் விஞ்ஞானிகள் முனைந்திருக்கிருர்கள் மரீனர்-6 ஐந்து மாதங்களுக்கு முன்னர் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட 5 நாட்களின்பின்னர்மரீனர்-7 செலுத்தப்பட்டது. மரீனர்-6 அனுப்பியுள்ள படங்களை விஞ்ஞானிகள் துருவித்துருவிஆராய்ந்துகொண்டிருக்கிருர்கள். இந்தப்படங்களில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயங்களை மரீனர்-7 உறுதிப்படுத்துவதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

கடைசியாகக்கிடைத்த தகவலின்படி செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பது தென்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## நச்சுத்திராவகம் அருந்தியவர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

நச்சுத்திராவகம் அருந்திய நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சங்கானையைச் சேர்ந்த இராசையா தியாகராசா (26 வயது)என்பவர் அனுமதிக்கப்படுகையிலேயே மரணமாஞர். மரண விசாரணை நடைபெறுகின்றது. (கா.நி.)

யாழ். பொலிஸார்

# டாக்டர் கவலையீனம் பற்றி சுகாதாரஇலாகாவிடம் புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சட்டவைத்திய அதிகாரி ஒருவர் வைத்திய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம் காட்டியதற்கு உடனடியாகக் காரணம் காட்டுமாறு யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சகரால் விளக்கம் கோரப்பட்டுள்ளார்.

வைத்திய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் அதிக தாமதம் செலுத்துவதால் சுமார் 20 காயப்படுத்திய வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கலசெய்யப்படாதிருப்பதாக யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியினர் சுகாதார இலாகாவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே மேற்படி டாக்டர் விளக்கம் கேட்கப்பட்டார்.

இதுபற்றி வட பகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவிக்கையில் டாக்டரின் இப்படியானகவலையீனத்தாலும், தேவையற்ற தாமதத்தாலும் பல குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கமுடியாமலிருப்பதாவும், வழக்குகளைத் தாக்கல்செய்யமுடியாமலிருப்பதாகவும், இது விஷயம் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டாா.

சம்பந்தப்பட்ட டாக்டர்மீது வேறு சில ஒழுங்குப் பிரச்னை சம்பந்தமான விசாரணைகளும் நடைபெறுவதாக சுகாதாரப்பகுதிஅதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா-நி)

# சுவாமி விபுலானந்தருக்கு காரைதீவில் சிலை நிறுவப்படும்

## கொழும்பிலிருந்து ஊர்வலமாக கொண்டு வரப்படும்

கல்முனை, திங்கள்

யாழ். நூல் வித்தகர் சுவாமி விபுலானந்தருக்கு அவரது பிறப்பிடமான கிழக்குமாகாணத்திலுள்ள காரைதீவிலே சிலை அமைக்க ஏற்பாடாகியுள்ளது- இத்தகவலை காரைதீவு கிராமசபைத் தலைவர் திரு. எம். பரசுராமன் தெரிவித்தார். கொழும்பிலே உள்ள பிரபல சிற்பி ஒருவரால் செய்யப்படும் சிலை செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் காரைதீவில் நிறுவப்படும்.

கொழும்பிலிருந்து ஆரம்பிக்கும் சுவாமி விபுலானந்தர் சிலை திருகோணமலைக்கு சென்று அங்கிருந்து மட்டுநகர் ஊடாக காரைதீவை அடையும் எனத் தெரியவருகிறது.

முத்தமிழ் வித்தகர்சுவாமி விபுலாநந்தருக்கு சிலை அமைக்கும் விடயத்தில் சாதிசமய வேறுபாடின்றி எல்லோர் ஒத்துழைப்பைத்யும் தரும்படி கிராமசபத்தலைவர் பரசுராமன் வேண்டுகாள் விடுத்துள்ளார்.

## சித்தியடைந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்னை மத்தியகர்நாடக இசைக்கல்லூரி நடாத்திய சங்கீத வித்வான் பரீட்சையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன் முதற்பிரிவில்சித்தியடைந்திருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மின்சாரத்தில் இயங்கும் ''சன்பீம்'' சேவிங் மிஷின் விற்பனைக்குண்டு. றேடியோ எலெக்றிக்ஸ் 80, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1294

## தவறிவிட்டது

வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் ஸ்டான்லி வீதியில் 3 காணி உறுதிகளும் வங்கிப் புத்தகமும், வேறு சில தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து என்னிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். நா. செல்வரத்தினம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1064

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## திங்கள் 4—8—69

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலினிசை, 7-35 வானொலிக் குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

''புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்''

ஏ. எவ். றேமண்ட்ஸ்,

117, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்

# கட்டிடம் நிர்மாணிப்பதற்கான கேள்விகள்

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் 157-வது மைலுக்கருகாமையில் காரியாலயம் ஒன்றும் அதற்குப்போகும் வழியும் நிர்மாணிப்பதற்கு, அரசாங்கத்தில் ரூ. 100,000-க்கும் அதற்கு அதிகமான தொகைக்கும் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கிளிநொச்சி, தென்யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி யூனியனிடம் வைப்புப் பணமாக ரூ. 250 செலுத்துவதின்மூலம்பெறப்படும் பத்திரங்களிலேயே கேள்விகள் தாக்கல்செய்யப்படவேண்டும். வழங்கப்படும் ஒவ்வொரு பத்திரத்துக்கும் ரூ 2-50 வீதம் அறவிடப்படும். இது திருப்பிக் கொடுபடமாட்டாது.

கேள்விப் பத்திரங்கள் 15-8-69 மு. ப. 10-00 மணிக்கு முன் எமக்கு வந்து சேரக்கூடியதாக 'சீல்' வைக்கப்பட்ட பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'யூனியன் கட்டிடத்துக்கான கேள்விப் பத்திரம்' என்று எழுதப்பட்டிருக்கவேண்டும்.

15-8-69 காலை 10 மணிக்கு யூனியன் காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது அவைகளைத்தாக்கல் செய்தவர்கள் பிரசன்னமாய் இருக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்விப் பத்திரங்களில் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் நிராகரிப்பதற்கும் எந்தக் கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையாவது ஏற்றுக்கொள்வதற்கும் யூனியன் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு.

தெரிவுசெய்யப்படுபவருக்கு அவருடைய கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பத்து நாட்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொள்ள அழைக்கப்படுவார். தவறின் வைப்புப்பணத்தை இழக்கநேரும். இதர எல்லா வைப்புப்பணமும் திருப்பிக்கொடுக்கப்படும்.

ஏ. சிவசுந்தரம்,
தலைவர்.

கே. மயில்வாகனம்,
நிர்வாக காரியதரிசி. 1684

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்

# POSTS OF PUBLIC HEALTH INSPECTORS (TEMPORARY) MUNICIPAL COUNCIL, JAFFNA.

Applications are invited by the Municipal Commissioner, Jaffna, for appointment to the above Posts.

Applicants should state their age, Qualifications and experience and should forward copies of relevant Certificates.

Appointments will be purely temporary and payment will be on a daily rate of pay.

The closing date of applications is 15-8-69.

A. T. Sunderam.
Municipal Commissioner.
Jaffna.

Municipal office, Town Hall,
Jaffna, August, 1, 1969.

1685

கிழக்குஇலங்கை

## பாடசாலைவிளையாட்டு போட்டிமுடிவுகள்

திருக்கோணமலை, ஞாயிறு

மட்டக்களப்புவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இலங்கை பொதுப் பாடசாலைகளுக்கான கிழக்குப் பகுதி விளையாட்டுப்போட்டிகளில் சிரேஷ்ட பிரிவு சாம்பியனாக திருமலை அர்ச்சூசையப்பர் கல்லூரி வெற்றியீட்டியது. மட்டுநகர் சிவானந்தா வித்தியாலயமும் அர்ச் மைக்கேல் கல்லூரியும் இரண்டாவதாக வந்தன.

17 வயதுக்குட்பட்டவர்களின் போட்டிகளும் திருமலை அர்ச் சூசையப்பர் கல்லூரிமட்டுநகர்வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்து சாம்பியனாகியது. 16வயதுக்குட்பட்டவர்கள் போட்டியில் மட்டுநகர் மெதடிஸ்த மத்திய கல்லூரி ஒரு புள்ளியை கூடுதலாகப் பெற்று திருமலை அர்ச் சூசையப்பர் கல்லூரியைத்தோற்கடித்து சாம்பியனாகியது.

......

## 20000 குற்றவாளிகள்

கோட்டை, சனி

நாட்டின் குற்றவாளிகள் தொகை அதிகரித்து வருவதாகப் பொலிஸ் பகுதியினர் தெரிவித்துள்ளனர். வருடாவருடம் குற்றவாளிகள் தொகை அறுநூறாய் கூடிக்கொண்டே வருகிறதென பொலிஸ் குற்றப் பிரிவு புள்ளிவிபர அதிகாரி குறிப்பிட்டுள்ளார். நாட்டில இப்பொழுது 20,000 குற்றவாளிகள் இருக்கின்றனராம்.

......

## முதலாவது டின்மீன் தொழிற்சாலை

மன்னார், ஞாயிறு

மன்னார்ப் பகுதியிலுள்ள

# யாழ். மேயர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம்

## இலங்கை ரீதியில் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். உதைபந்தாட்டச் சங்கம், ''யாழ். மேயர் வெற்றிக் கிண்ணத்துக்கான'' ''நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டி'' யொன்றை, அகில இலங்கை ரீதியில் நடத்தவிருக்கிறது.

யாழ். மேயரின் பெயரால் சுமார் 1500 ரூபா பெறுமதியுள்ள ஒரு வெள்ளிக் கிண்ணத்தை யாழ். மாநகர சபை, யாழ். உதைபபந்தாட்டச் சங்கத்துக்கு வழங்க முன்வந்துள்ளது.

இக் கிண்ணத்துக்கான போட்டியை சிறந்த முறையில் ஏற்பாடு செய்வது பற்றி ஆலோசிக்க, யாழ். உதைந்தாட்டச் சங்கசெயற்குழு மிக விரைவில் கூடவிருக்கின்றது.

இதன் பொருட்டு மிக விரைவில் நொக்கவுட் போட்டியொன்றை நடாத்துவதென்றும், அகில இலங்கையிலுமுள்ள விளையாட்டுக் கழகங்களை இப் போட்டியில் பங்குபற்ற அழைப்பதென்றும், சமூகங்களிடையே ஐக்கியத்தையும், நல்லெண்ணத்தையும் வலுப்படுத்தவே இப் போட்டியை நடாத்துவதின் முக்கிய நோக்கமாகுமென, யாழ். உதைபந்தாட்டச் சங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

(தே. நி)

## அன்பளிப்பு

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் 9000 தொன் கோதுமை மாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. சுமார் 43 லட்சம் ரூபா பெறுமதியான இந்த மாவை இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவர் உணவு அமைச்சர் திரு. எம்டி. பண்டாவிடம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து ஒப்படைத்தார்.

## எதிரிகள் விடுதலை

அளவெட்டி, ஞாயிறு

சங்கானை மேற்கைச் சேர்ந்த எஸ். கந்தையா என்பவருடைய வீட்டிலிருந்து 1020 ரூபா ரொக்கமும், சேலைகளும் களவாடியதாக அதேயூரைச்சேர்ந்த ஜி. சரவணமுத்து, என். கதிரவேலு என்பவர்கள் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். விசாரணை செய்தமாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி சாட்சிகள் முரண்பாடு காரணமாக எதிரிகளை விடுதலை செய்தாகத் தெரிவித்தார்.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் எஸ். சிவபாக்கியநாதன் ஆஜராகியிருந்தார்.

## நியமனம்

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலையைச் சேர்ந்த தொழில் உத்தியோகத்தரான திரு. பி. எம். பியூசுப்ஸா இவ்வாண்டு மார்ச் மாதம் முதல் தற்காலிக உதவி தொழில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'நிரந்தரமாக்குக'

திருக்கோணமலை, ஞாயிறு

கிண்ணியா த்துறையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படல் வேண்டும். அத்துடன் மழை காலங்களில் வேலை செய்வதற்கு மழைக் கோட்டும் வழங்கவேண்டும் என்று போக்குவரத்து மராமத்து அமைச்சை மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் எம். எல். ஏ. மஜீத் கேட்டுள்ளார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

அங்கத்தவர்களுக்கு

ஓர் முக்கியமான வேண்டுகோள்

அன்புடையீர்!

கூட்டுறவு என்பது ஓர் குடும்பத்தை ஒத்தது. ஓர் குடும்பத்தை நல்ல சீரான முறையில் நடத்தக்கூடியவருக்குக் கூட்டுறவைப் பற்றி நாங்கள் சொல்லத் தேவையில்லை. சர்வாதிகாரமோ அல்லது தொழிலாளி முதலாளி முறையோ கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்குமாயின் அது அந்த ஸ்தாபனத்தின் மூடுவிழாவின் அறிகுறி எனலாம். ஆகவே தயவு செய்து இம்முறை அப்படியான குணமுடையவர்களைக் களைந்தெறிந்து குடும்ப அனுபவம், நேர்மை குறிக்கோள், சேவைமனப்பான்மை ஆற்றல், அறிவு, பொறுமை உள்ள அங்கத்தவர்களையே அதிகார சபைக்குத் தேர்ந்தெடுத்தனுப்பும்படி வேண்டிக்

# திருமலைச் செய்திகள்

## குழந்தைகள் கஷ்டம்

திருக்கோணமலை ஆஸ்பத்திரி சிறுவர் பகுதியில் குழந்தை நோயாளிகள் படுக்கைகளின்றிக் கஷ்டப்படுகின்றனர். ஒரு படுக்கையில் 23 குழந்தைகள் பங்கு கொள்ளவேண்டியிருக்கிறது.

## தொழிற் சங்க கூட்டம்

பொதுச்சேவை தொழிற் சங்க சம்மேளனத்தின் மாவட்டக்கிளையும் முதற் பிரதிநிதிகளின் சம்மேளனக் கூட்டமும் இம்மாதம் 5-ம் திகதி மாலை திருக்கோணமலை டொக்யாட் வீதியிலுள்ள அரசாங்கப் பொதுச்சேவையின் சங்க அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

## விபத்து நேரலாம்

சீனன்வாடியில் திருக்கோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனத்திற்குத் திரும்பும் பாதையில் தண்ணீர் குழாய் ஒன்று திருத்தம் செய்வதற்கு தோண்டி எடுக்கப்பட்டு பல மாதங்களாகியும் இப்பாறை மீண்டும்திருத்தப்படாமல் அதல பாதாள குழியுடன் காணப்படுவதால் தினமும் இந்த ஸ்தாபனத்திற்குத் தேயிலைப் பெட்டி ஏற்றி வரும் ஆயிரக்கணக்கான லொறிகள் விபத்தில் சிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன.

## விவசாயிகள் சங்கம்

புதிய குடியேற்றமான பாலம் போட்டாற்றில் விவசாயிகள் சங்கம் அமைத்துள்ளனர். இதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தலைவர்: நா. முத்துராஜா, உப தலைவர்: திரு. பண்டா, செயலாளர்: திரு. பெரேரா, பொருளாளர்: ஹென்றி அப்பு. நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## அரசாங்க அதிபர் பொறுப்பேற்றார்

திருக்கோணமலையில் வேப்பங்குளம் படித்த வாலிபர் திட்டத்தை திருமலை மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. சோமபாலா குணதிராதாமே பொறுப்பேற்றுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் 76 இளைஞர்கள் இருந்தனராயினும் தொடர்ச்சியாக ஏற்பட்ட நட்டத்தினாலும், வேறு பல காரணங்களினாலும் உழைப்பாளிகளின் எண்ணிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டு 14 ஆகக் குறைந்துள்ளது.

# வாகனப் போக்குவரத்து அறிவித்தல்

## 1969-ல் நடைபெறும் நல்லூர் கந்தசாமிகோவிலின் வருடாந்த உற்சவ விழா

மேற்படி விழாவின் பொருட்டாக 18-8-69 தொடக்கம் 14-9-69 வரை உட்பட்ட நாட்களிலும் கீழ்க்கண்ட வீதிகள் சகலவித வாகனப் போக்குவரத்துகளுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்திக்கும் இரண்டாவது மைல் கல்லுக்கும் இடையில் உள்ள பகுதி.
2. கோவில் வீதியில் பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.
3. செட்டித்தெருவில பருத்தித்துறை வீதிக்கும் செட்டி ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.

குறிப்பு: வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் அரசாங்கக் கடமையின் நிமித்தம் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிகப் பொலிஸ் நிலையத்தில் 17-8-69 பிற்பகல் தொடக்கம் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துக்களில் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் நோக்கிப்போகும் போது (அல்லது எதிர்த்திசையில்) நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி முதலியவற்றால் செல்லுதல் வேண்டும்.
2. அரசடி வீதிவழியாக கோப்பாய் நோக்கிப் போகும் போது (அல்லது எதிர்த்திசையில்) வைமன் வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றால் செல்லுதல் வேண்டும். வடக்கில் இருந்து தெற்கு வரை வைமன் வீதி ஒருவழிப் பாதையாக அமையும். அத்துடன் அரசடி வீதி மேற்கில் இருந்த கிழக்கு வரை (பலாலி வீதியில் இருந்து பருத்தித்துறை வீதி வரை) ஒருவழிப்பாதையாக அமையும்.

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்காக 4 இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். இவ் நான்கு இடங்களையும் நன்கு பாவிக்குமாறு சாரதிகள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

### மேற்படி இடங்களாவன

1. அரசடி வீதி வழியாக கந்தசாமிகோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
2. தென்பகுதியிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
3. கோப்பாய்த் திசையிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை முத்திரைச்சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.
4. பலாலி றேட் / தின்னவேலி வழியாக கந்தசாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை தின்னவேலி சிவன் கோவில் வீதியில் நிற்பாட்டலாம்

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
69-7-31.

எஸ். ஐ. அசீஸ்,
உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்
யாழ்ப்பாணம்.

1686

## உணவுற்பத்தியில் முதலிடம்

மின்னேரியா, ஞாயிறு

பொலனறுவை மாவட்ட உணவுற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. சராசரி 85-புசல் நெல் விளைவிக்கப்

## சமாதானக்குழு

விஸ்வமடு, ஞாயிறு

விஸ்வமடுவிவசாயப்பண்ணை முகாமில் வீரகளின் நலன் கருதி சமாதானக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பின் வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏ. எவ்.
றேமண்ட்ஸ்,

117, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்
மனம்நிறைந்த

அந்திய சேவை
ரூபா 175/-

உயர்தர பிரேதப் பெட்டிகள்
ரூபா 50/-

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்
புதிய கொப்பி

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]

சிவாஜி - ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த

எங்க ஊர் ராஜா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி,
சோ, மனோரமா, கண்ணன்
நடித்த

கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன்: ப. நீலகண்டன்

குற்றவாளிகள் இருக்கின்றனராம்.

......

## முதலாவது டின்மீன் தொழிற்சாலை

மன்னார், ஞாயிறு

மன்னார்ப் பகுதியிலுள்ள பேசாலையில ஒரு டின்மீன் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. இத்தொழிற்சாலையை அடுத்தமாதம் 5-ம் தேதி கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனு திறந்துவைக்கவுள்ளார்.

இலங்கையின் இந்த முதலாவது டின்மீன் தொழிற்சாலையை இலங்கை மீன்பிடி கூட்டுஸ்தாபனம் 18 லட்சம் ரூபா செலவில் நிறுவியுள்ளது.

......

## பசுப்பால் கசக்கிறதாம்!

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலையிலுள்ள ஓர் அரசாங்கப் பண்ணையில் பெறப்படும் பசுவின் பால் கசப்பாக இருக்கிறதாம். பண்ணையிலிருந்த பெரிய வேப்ப மரத்திலிருந்து முறிந்து விழுந்த மரக் கிளையிலிருந்த இலை, காய், பழம் முதலியவற்றை அப்பசுக்கள் புசித்ததினுலேயே அவற்றிடமிருந்து பெறப்பட்ட பால் கசப்புத்தன்மை வாய்ந்ததாக இருப்பதாக இங்கு பேசிக் கொள்ளப்படுகிறது.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர்,
ராமதாஸ், தங்கவேலு,
பத்மினி, பேபி ராணி
நடித்த
குழந்தைக்காக

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Clint Eastwood
in
FOR A
FEW DOLLARS MORE

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
Jane Fonda
in
BARBARELLA
Also Showing
APALLO - 8

தொழிலாளி முதலாளி முறையோ கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்குமாயின் அது அந்த ஸ்தாபனத்தின் மூடுவிழாவின் அறிகுறி எனலாம். ஆகவே தயவு செய்து இம்முறை அப்படியான குணமுடையவர், களைக் களைந்தெறிந்து குடும்ப அனுபவம், நேர்மை குறிக்கோள், சேவைமனப்பான்மை ஆற்றல், அறிவு, பொறுமை உள்ள அங்கத்தவர்களையே அதிகார சபைக்குத் தேர்ந்தெடுத்தனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். சில நாட்களுக்குமுன் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளிவந்த விஷயங்களையும் ஞாபகத்தில் வைத்திருங்கள்.

வணக்கம்

கு. இராசரத்தினம்
வைத்தியசாலை அங்கத்தவர்

மூளாய். 3-8-69. 1688

# இன்றைய பலன்

-சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை-

ஆடி மாதம் 20-ந் திகதி (4-8-69)

**மேஷம்-** வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும். எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும். நல்லதைச் செய்யினும் வீண்பழி கேட்க நேரிடும். வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம். திடசித்தம்வேண்டும்.

**ரிஷபம்-** இனிக்கப்பேசி காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். ஆதாயத்திலும் அபிவிருத்தி தென்படும். அரசியலாரின் கவனமும் உங்கள் பக்கம் திரும்பும்.

**மிதுனம்-** அதிக ஆசை வைப்பதன் மூலம் அவதிப்படுவீர்கள். குறுக்குவழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றலாம். ஆத்திரப்படுவதால் விபரீதவிளைவுகள் ஏற்படும். தடைகள் பலவுண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**கடகம்-** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு. எதிர்பாராதவகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும். பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச்செய்வார்கள். பண விவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். சிறப்பான தினம்,

**சிம்மம்-** காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார். உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும் தானதருமங்களில் விருப்பம் மேலிடும். இல்லம் இன்றது கட்டி வெல்லம்.

**கன்னி-** உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும். தொழிற்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம். அகால போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படமுடியும்.

**துலாம்-** களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும். இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும். பொருள்வரவிலும் திருப்திகரமான நிலை தென்படும்.

**விருச்சிகம்-** முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம். நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

**தனுசு-** பரோபகாரசிந்தை மேலிடும். பொதுப்பணி புரிவதில் ஆர்வம் பிறக்கும். மதத் தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையினுல் நல்ல பெயரும் கிடைக்கும்.

**மகரம்-** புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள் தொழில்புரியும் இடத்தில் உயர்ந்த அந்தஸ்தும் கிடைக்கும்.

**கும்பம்-** செலவுக்குவேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் கொடுத்த கடன் இன்று மீண்டும் வந்து சேரலாம். பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படும் புத்திரர்களாலும் புகழ் கிடைக்கும்.

**மீனம்-** எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணுக்கும். அற்பவிடயத்துக்குக்கூடப் பொல்லாங்கு கேட்க நேரிடும். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள். சிறிவடும் கோபத்தை அடக்கவும்.

இத்திட்டத்தில் 76 இளைஞர்கள் இருந்தனராயினும் தொடர்ச்சியாக ஏற்பட்ட நட்டத்தினுலும், வேறு பல காரணங்களினுலும் உழைப்பாளிகளின் எண்ணிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டு 14 ஆகக் குறைந்துள்ளது. வாலிபர்கள் விவசாயத்தில் முன்னேற்றம் காணும் முகமாக அவர்களுக்கு வேண்டிய ஊக்குதலை அளித்து இத்திட்டத்தை மீண்டும் சரிப்படுத்தியதால் இங்கு தொழில் புரிபவர்களின் தொகை தற்போது 30 ஆக உயர்ந்துள்ளது இந்த ஆண்டில் கோழிப்பண்ணையும் பாற்பண்ணையும் இங்கு ஏற்படுத்தப்படும்.

## உணவுற்பத்தியில் முதலிடம்

மின்னேரியா, ஞாயிறு

பொலனறுவை மாவட்ட உணவுற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. சராசரி 85-புசல் நெல் விளைவிக்கப்பட்டதாக பொலனறுவை அரசாங்க அதிபர் திரு. கே. ஏச். ஜெ. விஜேதாசா பொலனறுவை கச்சேரியில் நடைபெற்ற மகாநாட்டில் குறிப்பிட்டார். எல்லா இலாகாக்களினதும் உள்ளூ தலைவர்கள் உட்பட மேலதிக காணி ஆணையாளரும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர். மேலும் 6000 ஏக்கர் நிலப்பரப்பை விவசாயத்

## சமாதானக்குழு

விஸ்வமடு, ஞாயிறு

விஸ்வமடுவிவசாயப்பண்ணை முகாமில் வீரகளின் நலன் கருதி சமாதானக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு கே. கந்தப்பிள்ளை, செயலாளர்; திரு. கே. கணபதிப்பிள்ளை, மற்றும் திருவாளர்கள் அன்னையா, தெய்வேந்திரன், கதிர்காமராசா. ஆகியோர் மத்தியஸ்தர்களாகத் தெரியப் பட்டுள்ளனர்.


தின் கீழ் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டது.




அசுன்டோல்
அவை அனைத்தையும் அழித்து விடுகின்றது

* கால்நடைகளின் வெளிப்புறத்தைப் பாதிப்பனவற்றைக் கட்டுப்படுத்த மிகத் திறமையான—சிக்கனமான முறை
* எல்லா விலங்கினங்களுக்குமென பாதுகாப்பான வெளிப்பூச்சு மருந்து
* நச்சு ஈக்களைக் கட்டுப்படுத்தவென விசேஷமாக சிபார்சு செய்யப்பட்டது
* டிடிரி, பிஎச்சி, டொக்ஸாபேன், ஆர்சனிக் ஆகியவற்றுக்கு கட்டுபபடாத உண்ணிகள் அழிக்கலாம்
* உலகத்தின் பல பாகங்களிலும் பரிசோதித்து நிரூபிக்கப்பட்டது

ஹேலிஸ் லிமிடட்
எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் மற்றும் பின்வருமிடத்திலும் அசன்டோல் கிடைக்கும்:-
மருந்தகப்பகுதி




BAYER
ஹேலீஸ் லிமிட்டட்
400, டீன்ஸ் ரேட், கொழும்பு-10.
தபால் பெட்டி 70, தொலை பேசி: 96333
HAYLEYS
VISION 1040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிரகத்தில் உயிர்கள் இருக்கும் சாத்தியமே இல்லையாம்

ஹூஸ்டன், ஆக. 3

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீரும் இல்லை, நைட்ரஜன் வாயும் இல்லை. உயிர்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமான இவை இல்லாததால் அங்கு உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியமும் இல்லை.

இந்தக் கருத்தை விண்வெளி அறிஞர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மெரினர்-6 அனுப்பியுள்ள படங்களின்மூலம் இந்த முடிவிற்கு இவர்கள் வந்திருக்கிறார்கள். செவ்வாய்க்கிரகத்தில் கால்வாய்கள் இருக்கும் சாத்தியம் இல்லையென்றும் இந்த அறிஞர்கள் கூறினார்கள். செவ்வாயில் கால்வாய்கள் போன்ற அமைப்புகள் இருப்பதாக முன்னர் அறிஞர்கள் நம்பிவந்திருக்கிறார்கள். அங்கு தாவரங்கள் வளர்ந்திருப்பதான ஆதாரமும் கிடைக்கவில்லையாம்.

மெரினர்-6 அனுப்பியிருக்கும் படங்களிலிருந்து வெளியாகியுள்ள தகவல்களை மெரினர்-7 அனுப்பும் படங்களின்மூலம் உறுதி செய்து கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மெரினர்-7 இப்போமுது செவ்வாய்க்கிரகத்தை அண்மிக் கொண்டிருக்கின்றது சுமார் 2000 மைல் தொலையிலிருந்து அது படங்களை அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### டெலிவிஷனில் செவ்வாய்

செவ்வாய்க்கிரகத்தின் நெருங்கிய காட்சிகளை கலிபோர்னியாவிலுள்ள ஆராய்ச்சி கூடத்தின் டெலிவிஷன் திரையில் காண முடிந்தது. செவ்வாய்க்கிரகத்தின் இந்த நெருங்கிய தோற்றத்தை இதுவரை மனிதன் கண்டதில்லை.

செவ்வாய்க்கிரகத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் மெரினர் 6 விண்வெளிக்கப்பலே இந்த டெலிவிஷன் படங்களை அனுப்பியுள்ளது. செவ்வாய்க்கிரகத்தின் மேல் பரப்புக்கு 2000 மைல் முதல் 5000 மைல் தூரத்திலிருந்து மெரினர் விண்வெளிக் கப்பல் இந்தப் படங்களை அனுப்பியது.

செவ்வாய்க்கிரகத்தில் அகழிகளும்; அகழிகளுக்குள் அகழிகளும் நிறைந்திருக்கின்றன. செவ்வாய்க்கிரகத்தில் ஒரு வட்டவடிவமான இடம் உள்ளது. இது மலையாக இருக்க வேண்டும் என்று முன்பு கருதப்பட்டது. அது 500 மைல் அகலம் உள்ள அகழி என்று இப்போது கிடைத்துள்ள டெலிவிஷன் படங்களிலிருந்து தெரிகிறது.

சயப்ரின் வடிவத்தில் செவ்வாய்க்கிரகத்தில் ஒரு இருண்ட பகுதி காணப்படுகிறது. இங்கு மிகவும் கரடுமுரடான மலைகள் நிறைந்திருப்பதாக டெலிவிஷன் படங்களிலிருந்து தெரிகிறது.

## சந்திர மண்ணில் கிருமிகள் கிடையாது

சந்திரனிலிருந்து, நீல் ஆம்ஸ்ரோங்கும் எட்வின் ஆல்ட்றினும் கொண்டுவந்துள்ள சந்திர மண்மாதிரிகளில் நோய்க் கிருமிகள் எதுவுமில்லையென்பது உறுதியாகியிருக்கின்றது. சந்திரப் பொருட்களை 24 எலிகளின் மீது செலுத்திப் பரிசோதித்ததில் இந்த உண்மை வெளியாகியிருக்கின்றது. எலிகள் யாவும் ஆரோக்கியமாக இருக்கின்றனவாம். சந்திரனில் வேறு எந்த உயிர் வாழும் பிராணியும்கூட இருக்க முடியாது என்பதுப் ருசுவாகியிருக்கின்றது என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

## 'நோயாளியின் கேள்விக்கு

யாழ். மாவட்டத்தில்

## 6000 வாலிபர்கட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட தேசிய வாலிபர் சேவைப் பேரவையில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் தலா 500 பேர் வீதம் 12 காரியாதி பிரிவிலும் மொத்தம் 6000 வாலிபர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்றஇதன் ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது. அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டாஸ் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் இரண்டு வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் 250 இளைஞர்கள் வீதம் மொத்தம் 500 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்களது புகைப்படம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.

வேலைக்கான உபகரணங்களும் இவர்கட்கு வழங்கப்படுவதோடு, ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு மூன்று ரூபா வீதம்வாராவாரம் சம்பளம் வழங்கப்படும். மூன்று ரூபாவில் ஒரு ரூபா இவர்களது பெயரில் சேமிப்பு வங்கியில் சேர்க்கப்பட்டு இரண்டு ரூபா மட்டுமே சம்பளமாக வழங்கப்படும்.

இதற்கு இளைஞர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் நேற்றுசகல காரியாதிகாரிகட்கும் வழங்கப்பட்டது. முதலாவது வேலைத் திட்டம் இம்மாத இறுதியில் ஆரம்பமாகும் என்று வாலிபர்சேவைப் பேரவைச் செயலாளரான உதவிஅரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார். (கா. நி)

## 6 வீரர்களை நாகர்கள் கொன்றனர்

கோஜிமா, ஆகஸ்ட்-3

ஜீப்வண்டியொன்றில் போய்க்கொண்டிருந்த இந்

## மாவை ஆலய பிரச்னை

### பரு. எம். பி. வேண்டுகோள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

"மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரச்னையை சைவ சமயத்தவர்கள் மனச்சாட்சி கொண்டும். பெருந்தன்மையுடனும் தீர்த்து வைக்க முற்படவேண்டும். அல்லாவிடில் இப்பிரச்னை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு மோசமான விளைவுகளை ஏற்படுத்துமே தவிர ஒரு நிரந்தரமான முடிவைக் காண முடியாதநிலைமை ஏற்பட்டுக் கொண்டே வரும்.''

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. துரைரத்தினம் மேலும் தெரிவிக்கையில், "இந்த நேரத்தில் சைவமக்கள் பிரிவினையை ஏற்படுத்தாதுஒரு சமத்துவமானநிலையைக் கடைப்பிடிக்கவேண்டும். இப்பிரச்னையை குறுக்கு வழியாலும் தந்திரோபயத்தாலும் தீர்த்து வைக்கலாமென எண்ண முற்படக் கூடாது. காலத்துக்கு ஏற்றதாக கருத்தையும் மாற்ற நாம் முற்படவேண்டும். சைவசமயத்தவர்கள் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் பெருந்தன்மையுடன் செயலாற்ற முற்படவேண்டும். ......

## ரூ.300 பிணை

அளவெட்டி, திங்கள்

பொன்னாலை கத்திக் குத்தில் கைதான வரை 300 ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி அனுமதித்தார்.

பொன்னாலையைச் சேர்ந்த ஐயன் கந்தையா என்பவ

## பஸ்ஸில்கசிப்பு

மீதோட்டமுல்லை, ஞாயிறு

கொழும்பு பகுதியில் இ. போ. ச. பஸ்களிலும் கசிப்பு, கஞ்சா போன்ற சட்டவிரோதப் பொருட்கள் கடத்தல் செய்யப்படுவதாக பொலிசாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன

தெமட்டக்கொடைப் பொலிசார் இ போ. ச. பஸ்களில் திடீர் சோதனைகள் செய்யத்தொடங்கியுள்ளார்கள். இதன் பயனாக இ. போ. ச. பஸ்ஒன்றில் கடத்தல் செய்யப்பட்டதாகக் கருதப்படும் 48கசிப்புபோத்தல் மூடை ஒன்றைக்கைப் பற்றினர். இக்கடத்தலில் சந்தேகத்தின் பேரில் திரு. ரி. தருமதாச என்பவர் கைது செய்யப்பட்டுமாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டார்

இக் கடத்தலில் குற்றவாளியாகக் காணப்பட்ட திரு ரி. தர்மதாசாவுக்கு மாஜிஸ்திரேட் 350 ரூபாய் அபராதம் விதித்தார். (கா. நி)

## மாநகரசபைக்கு சொந்தமாகும்

யாழ்ப்பாணம், திங்கள்

பாஷையூரில் காட்டுக் கந்தோர் இருக்கும் வளவு விரைவில் யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

யாழ். மாநகரசபைமுதல்வர் திரு. எஸ். நாகராஜா இத்தகவலைத் தெரிவித்தார். இங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் திரு. நாகராஜா மேலும் தெரிவித்ததாவது:

பாஷையூர் காட்டுக்கந்தோர் காணி மாநகரசபையிடம் கையளிக்கப் பட்டதும் அந்தக் காணியில் கர்ப்பிணிகள், குழந்தைகள், பாலகர்கள் சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படும். இது பாஷையூர் மக்களின் தேவைகளைத் தீர்த்து வைப்பதாக அமையும். இது யாழ். நகர எல்லைக்குள் 7-வது சிகிச்சை நிலையமாக அமையும்.

யாழ். நகர வைத்திய அதிகாரி திரு. வி. நடராஜாவின் சேவைகள் பற்றியும்

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி பிரிவில் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி பரிசளிப்பு விழா, பளை மகாவித்தியாலயத்தில் காரியாதிகாரி சோ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. முக்கியநிகழ்ச்சியாக இடம் பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பச்சிலைப்பள்ளிப்பகுதி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் பச்சிலைப் பள்ளிப்பகுதித் தெரிவுக் கோஷ்டியை 2-1 ஆட்டத்தால் தோற்கடித்தது. விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட பகுதி விளையாட்டு அதிகாரி திரு ஏ. பி. டி. யேசுதாசன் பேசுகையில், வெளிநாடுகளிலுருந்து இங்கு வரும் பல்வேறு விளையாட்டுப்பயிற்சியாளரையும் இப்பகுதிக்கு அழைத்து வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒழுங்கு செய்வதாகவும், இப்பகுதிக்கு ஓர் விளையாட்டுமைதானம் அமைப்பதற்கு அரசாங்கத்திடம் உதவி பெற்றுத் தருவதாகவும் கூறினார் மற்றும் திருவாளர்கள் ஏ. ஜி. ராசசூரியர், சின்னத்துரை, ம. மரியதாஸ், சிவஞானசுந்தரம் கிராமசேவையாளர் சின்னத்தம்பி ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

போட்டிமுடிவுகள்: கரபந்தாட்டம் பிரிவு 'அ' தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம். பளை பாரதி விளையாட்டுக்கழகம். பிரிவு 'ஆ' தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம், புலோப்பளைசென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.

தாச்சிப்போட்டி: புலோப்பளை சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி யேசுதாஸன் பரிசில்களை வழங்கினர். பச்சிலைப் பள்ளிப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் திரு. தொ. சவிரிமுத்து நன்றியுரை கூறினர்

## இறப்பு பிறப்பு பதிவுகள்

கொழும்பு, ஞாயிறு

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம், பொலன்னறுவை மாவட்டங்களிலும் தமிழில் பதிவுகள் நடைபெறும் பிரிவுகளில் வாழும் சிங்கள மக்களின் இறப்பு, பிறப்புப் பதிவுகளைச் சிங்கள மொழியில் பதிவுசெய்வதற்கான ஒழுங்குகளை பதிவாளரதிபதியின் திணைக்களம் செய்துள்ளது.

புதிய ஒழுங்கின்படி, தமிழில் பதிவு நடைபெறும் பிரிவில் வாழும் சிங்களவரொருவருடைய இறப்போ, பிறப்போ நிகழுங்கால், அதனை அறிவிப்பவர் (110ம் அத்தியாயமான) பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 16 அல்லது 30-ம் பிரிவின் கீழ் பிரிவுப் பதிவுகாரரிடமிருந்து, ஒரு அறிவித்தல் பத்திரமொன்றைப் பெற்று, அதனைசிங்களத்தில் நிரப்பிப் பதிவாளரிடம் கொடுத்ததும், பதிவாளர் அதனைஏற்றுக்கொண்டதனை ஒப்புக்கொள்வார். பதிவாளர் அதனைப்பின்னர் மாவட்டப்பதிவாளருக்கு அனுப்பிவைப்பார். அவர் அதனைச் சிங்களத்தில் பதிவுசெய்வார்.

அரசாங்க ஆஸ்பத்திரியிலோ அல்லது பிரசவ விடுதியிலோ நடந்த இறப்பு அல்லது பிறப்பைப் பதிவதற்கு மேற்கண்டவாறு பிரிவுப் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டியதில்லை.

ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரியிடமிருந்து அறிவிப்புகள் கிடைத்ததும், பிரிவுப் பதிவாளர், சிங்களக் குடிமக்களின் அறிவிப்புக்களைப் பிரித்தெடுத்து அவற்றை மாவட்டப் பதிவாளருக்கு அனுப்புவார். அவர் அவற்றைச் சிங்கள மொழியில் பதிவுசெய்வார்.

## மாணவிகளைக் கடத்த முயன்றனராம்

### ரூ 10,000 பிணை

திருக்கோணமலை, ஞாயிறு

16 வயது நிரம்பிய பாடசாலை மாணவியைக்காரில் சடத்திச்செல்லமுயன்றஇருவர்திருமலைமாவட்டமாஜிஸ்திரேட்முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். விசாரணை செய்தமாஜிஸ்திரேட் திரு. டி. ஸி. டபிள்யூ. விக்ரமசேகர, இருவரையும் தலா 10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்தார்

திருக்கோணமலை தேயிலை நிர்வாகஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஒருவரின் தலையீட்டினால் குறிக்கப்பட்ட பெண் தக்கசமயத்தில் காப்பாற்றப்பட்டதாக நீதிமன்

## புதியநிர்வாகிகள்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை மேற்கு திருவள்ளுவர்சனசமூகநிலைய வாலிபமுன்னணி திரு. சி. கந்தசாமி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. ஆ. பாலசுப்பிரமணியம், உபதலைவர்: நா. செல்வராசா, செயலாளர்: ஆ. பாலேந்திரன், உபசெயலாளர்: கா. தேவதாசன், தனாதிகாரி: மு. தம்பிராசா. அறுவர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை கிழக்கு தேவி கோட்டம் சனசமூக நிலைய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். காப்பாளர்: திரு. எம். தியாகராசா, தலைவர்: திரு. மு. சி. முத்துத்தம்பி, துணைத்தலைவர் : எஸ் மகேஸ்வரன், செயலாளர்: ஏ. அமிர்தலிங்கம், துணைச்செயலாளர்: என். கோபாலபிள்ளை, பொருளாளர்: மு. மருதையா, துணைப்பொருளாளர்: என். பாலன், கணக்குப் பரிசோதகர்: எஸ். கனகலிங்கம். நிர்வாக சபையொன்றும்தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

கோட்டை, ஞாயிறு

சைவ மங்கையர் கழகத்தின் 39-வது வருடாந்த பொதுக்கூட்டம் வெள்ளவத்தை கழக மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திருமதி எம். தம்பையா; உபபோஷகர்கள்: திருமதி ஜி. ஜி பொன்னம்பலம், திருமதி எஸ். ராஜரத்தினம் அருணாசலம் மகாதேவா அம்மையார், சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் அம்மையார், தலைவர்: திருமதி பி. நமசிவாயம், உபதலைவர்கள்: திருமதிகள்: ரி. தியாகராசா, எம். சபாரத்தினம், எம். திருவிளங்கம், கே. ரி. சிற்றம்பலம், எஸ். செல்லையா, கே. கனகரத்தினம், கௌரவ இணைக்காரியதரிசிகள்: திருமதிகள்: ஆர். கந்தையா, ரி, திருச்சிற்றம்பலம், கௌரவ தனாதிகாரி: திருமதி எம். இரத்தினபாலசூரியர், சங்கீத பாடசாலை இணை மனேஜர்கள்: திருமதிகள் ஆர். ஜெகநாதன், எஸ். தங்கராசா, வி. அருளம்பலம். கமிட்டி அங்கத்தவர்கள்; திருமதி கே. கனகசபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் நோய்க் கிருமிகள் எதுவுமில்லையென்பது உறுதியாகியிருக்கின்றது. சந்திரப் பொருட்களை 24 எலிகளின் மீது செலுத்திப் பரிசோதித்ததில் இந்த உண்மை வெளி வாழும் பிராணியும்கூட இருக்க முடியாது என்பதும் ருசுவாகியிருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள்.

# 'நோயாளியின் கேள்விக்கு டாக்டர்பதிலளிப்பது அவசியம்'

சென்னை, ஆகஸ்ட் 3

நோயாளிகள் வியாதி சம்பந்தமாக எழுப்பும் கேள்விகளுக்கு டாக்டர்கள் முறையாகப் புதில் தரவேண்டியது அவசியம் என்று சென்னை கலெக்டர் பத்ரிநாத், ஏ.என். சட்டநாதன் வி பி. ராமன் முருகேச முதலியார் ஆகியோர்கள் இன்று சென்னை மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரிமண்டபத்தில்நடந்தஒருகருத்தரங்கில் வற்புறுத்தினார்கள்.

நோயாளிகளின் கேள்விகளை பல டாக்டர்கள் சரியாகக் கவனித்து பதில் அளிப்பது இல்லை என்று அவர்கள் குற்றஞ் சாட்டினார்கள்.

வேலை நிறுத்தங்கள் கூடாது என்று கருத்தரங்கில் பேசிய எல்லா டாக்டர்களும் ஒரு மனதாகக் கண்டித்தார்கள். சுகாதாரம் பற்றி மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டியது அவசியம் என்று டாக்டர் பி. கே. கிருஷ்ணன் கூறினார்.

டாக்டர் - நோயாளி ஆகியவர்களுக்கிடையேநெருக்கமான உறவுக்கு மாற்றுஎதுவும் கிடையாது என்று டாக்டர் ஆர். வி. ராஜம் கூறினார்,

எந்தச் சிறிய வியாதிக்கும் பெரிய மருத்துவ நிபுணரிடம் போகும் பழக்கம் வளர்ந்து வருகிறது என்றும் அது சரியல்ல என்றும் டாக்டர்கள் கூறினர்.

10 ஆண்டுகளாக பார்மஸிட்டுகளாக இருப்பவர்களை வைத்திய தொழில் நடத்த அனுமதிப்பது என்று மத்திய அரசின் சுகாதாரப் பொது கவுன்சில்முடிவுசெய்திருப்பதை டாக்டர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள்.

# பூமி வெடிப்புகளில் 'ஈலியம்' படிவுகள்

## சோவியத் கண்டுபிடிப்பு

மாஸ்கோ. ஆக. 3

பூமியின் மேற்கோதில் ஈலியம் செறிந்திருக்கிறது என்பதை சோவியத் புவிகற்பவியலாளர்கள் கண்டு பிடித்துள்ளார். ஈலியம் கடற்பரப்பின் கீழ் 300 பாகத்தைக் காட்டிலும் ஆழமான இடத்திலுள்ள வெடிப்புகளில் படர்ந்திருக்கிறது என்பதை இவர்கள் நிரூபித்துள்ளனர்.

300 ஆயிரம் சதுர கிலோமீட்டர் விஸ்தீரணமுள்ள பகுதியில் 100 ஆயிரம் பரீட்சார்த்தமாதிரிகளை இவர்கள் ஆராய்ந்தனர். எல்லா இடங்களிலும் வெடிப்புகள் மீதே ஈலியம் படர்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது ஈலியம் றேடியோ கதிரியக்கவுளும் நிறைந்த கருங்கற்கள் மீதே படர்ந்திருக்கிறது என்ற பழைய அனுமானத்தை இந்தக்கண்டு பிடிப்பு பொய்ப்பித்து விடுகிறது. சோவியத் விஞ்ஞானிகளின் இந்தக்கண்டு பிடிப்பு பூமியின் மேற்கோதின் அமைப்புப் பற்றி சரியான கருத்தைப் பெற உதவும். இந்தக் கண்டு பிடிப்பு பெரும் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெளிப்புகளின் இடுக்குகளில்தான் தங்கம், ஸிங்க், ஈயம் ஆகிய அபூர்வ உலோகங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. ஈலியம் பெருமளவில் இருப்பதைக் கண்டு பிடிப்பது இலகுவானது என்பதனால் மேற்குறிப்பிட்ட உலோகவளங்கள் இருப்பதைக் கண்டு பிடிக்க இது உதவும். மிக ஆழத்தில் உலோக வளங்கள் இருப்பதை ஈலியம் மூலம் கண்டு பிடிப்பது கஸக்ஸ்தானிலும் யூரல்ஸிலும் பரீட்சார்த்திக்கப்பட்டுள்ளது.

## சங்காபிஷேகம்

கோண்டாவில், ஞாயிறு

இம்மாதம் 9-ம் திகதி கோண்டாவில் செங்கற்பனை (புகையிர நிலையத்திற் கருகாமையில்) புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் தேவஸ்தானத்தில் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது அன்று மாலை திருவூஞ்சல் திருவிழாவும் நடைபெறும்.

# 6 வீரர்களை நாகர்கள் கொன்றனர்

கோஜிமா, ஆகஸ்ட்-3

ஜீப்வண்டியொன்றில் போய்க்கொண்டிருந்த இந்திய ராணுவவீரர்கள் ஆறுவரை தலைமறைவு நாகர்கள் வழிமறித்துத் தாக்கிக் கொன்றிருக்கிறார்கள்.

# கருணாநிதி பிரிட்டன் போவார்

சென்னை, ஆகஸ்ட் 3

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பிரிட்டனுக்குவிஜயம்செய்யவிருக்கிறார். பிரிட்டனிடமிருந்து அழைப்பைத் தாம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அக்டோபர் மாதம் அங்கு செல்லலாம் என்று உத்தேசித்திருப்பதாகவும் திரு. கருணாநிதி வேலூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பிரிட்டனில் தொழில் நிறுவனங்கள் உள்ள பகுதிகளுக்கு போய்ப்பார்க்க உத்தேசித்திருப்பதாக திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

## வட அயர்லாந்தில் மீண்டும் குழப்பம்

லண்டன், ஆகஸ்ட், 3

வட அயர்லாந்தில் மீண்டும் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் மோதல்கள் நிகழ்ந்துள்ளன. நேற்று ஏற்பட்ட ஒரு கலவரத்தின்போது 5 பொலிசார் காயமடைந்தனர்.

அளவெட்டி, திங்கள்

பொன்னாலை கத்திக் குத்தில் கைதான வரை 300 ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி அனுமதித்தார்.

பொன்னாலையைச் சேர்ந்த ஐயன் கந்தையா என்பவருக்கும் அதே இடத்தைச் சேர்ந்த எம். நாகேசுவுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக நாகேசு, ஐயன் கந்தையாவுக்கு கத்தியால் நெஞ்சில் குத்தினாராம். படுகாயத்துக்குள்ளான ஐயன் கந்தையா யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்.

இச் சம்பவம்சம்பந்தமாக சங்கானை பொலிசார் சந்தேகத்தின் பேரில் எம் நாகேசுவை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி எஸ். ஆனந்தக் குமாரசுவாமி இவரை 300 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 13-திகதி ஆஜராகும் படி உத்தரவிட்டார்.

## பயிர் நோய்

நிந்தாவூர், சனி

நிந்தாவூர் பயிர்ச் செய்கை ஒருவித புதிய நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர்களின் தாழ்கள் யாவும் வெண்மைநிறம் அடைந்து அழுகி விடுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இப்பகுதியிலுள்ள செட்டியாவட்டைப் பகுதியிலேயே இந்நோய் பரவிவருவதாகவும் விவசாயிகள் இந்நோயில இருந்து தங்கள் பயிர்ச்செய்கையை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

களின் தேவைகளைத் தீர்த்து வைப்பதாக அமையும். இது யாழ். நகர எல்லைக்குள் 7-வது சிகிச்சை நிலையமாக அமையும்.

யாழ். நகர வைத்திய அதிகாரி திரு. வி. நடராஜாவின் சேவைகள் பற்றியும் இங்கு கலந்து கொண்ட பலரும் பாராட்டிப் பேசினார்கள். (கா. நி)

## உபதபாலதிபர்கள் மகாநாடு

கோட்டை, திங்கள்

அகில இலங்கைத் தமிழ் பேசும் உப தபாலதிபர்களின் ஏழாவது வருடாந்த மகாநாடு கொழும்பில் நடைபெறவிருக்கிறது. தபால் மா அதிகாரி திரு. வேர்ணன் அபயசேகரா உட்படப் பல அதிகாரிகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் வட்டுக்கோட்டை எம். பி. திரு.அ.அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர்.

## பதவி வெற்றிடங்கள்

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை மாவட்டத்தில் பதவியாக் குடியேற்றப் பிரிவுக்கு பிறப்பு இறப்புப் பதிவாளர் பதவிக்கும் கட்டுக்குளப் பற்றுக் கிழக்குப் பிரிவுக்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாட்டுக் கழகம்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி யேசுதாஸன் பரிசில்களை வழங்கினார். பச்சிலைப் பள்ளிப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் திரு. தொ. சவிரிமுத்து நன்றியுரை கூறினார்

### கூட்டுத்தாபன கிளை

இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினர் தாளையடியில் ஒரு கிளையை நிறுவியுள்ளனர். இதன் மூலம் அன்றாடம்பிடிக்கும் மீன்களை தொழிலாளர்கூடிய விலைக்கு கூட்டுத்தாபனத்துக்கு கொடுத்து நன்மையடைய வழி ஏற்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தினர் தாங்கள் வாங்கும் மீன்களை ஐஸ் போட்டு லொறி மூலம் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளனர்.

### புதிய வீதி

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா தமது வடபகுதி விஜயத்தின் போதுமுள்ளிப்பற்றுக்கிராம சபைக்கு விசேஷ நன்கொடையாக வழங்கிய ரூபா 10,000 கொண்டு கட்டைக்காடுவெற்றிலைக்கேணி வீதிஅமைப்பதற்கு கிராம சபை ஆரம்ப வேலைகளை ஆரம்பித்துள்ளது.

### ஆசிரியர் நியமனம்

கட்டைக்காடு றோ. க. பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய செ. கணபதிப்பிள்ளை ஒய்வு பெற்று பல மாதங்களாக மாணவ ஆசிரியர் ஒருவரே மேற்படி பாடசாலையில் கடமைபுரிந்தார். பெற்றோர் ஆசிரியர்சங்கம், கி. மு.சங்கம் ஆகியன எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக இப்போது திரு. தா. அருளானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### புதிய பாலம்

தாளையடி மருதங்கேணி கடற்கரை வீதியில்பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பயனாய் ஒரு புதிய பாலம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன.

### புதிய தபால் நிலையம்

பச்சிலைப்பள்ளிப் பகுதியைச் சேர்ந்த கிளாலியில் ஒரு புதிய தபால் நிலையம் நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய தபால்நிலைய அதிபராக திரு. ம. யேசுதாஸன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### அஞ்சலோட்டம்

கல்விநூற்றாண்டுவிழாவை முன்னிட்டு மாணவர்களின் அஞ்சலோட்டம் ஆளியவளை அரசினர் பாடசாலையிலிருந்து ஆரம்பித்து உடுத்துறை தாளையடி. செம்பியன்பற்று வழியாக பருத்தித்துறையைச் சென்றடைந்தது.

10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்தார்

திருக்கோணமலை தேயிலை நிர்வாகஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஒருவரின் தலையீட்டினால் குறிக்கப்பட்ட பெண் தக்கசமயத்தில் காப்பாற்றப்பட்டதாக நீதிமன்றத்தில்தெரிவிக்கப்பட்டது. வீதியில் பெண்ணின் கூக்குரல் சப்தம் கேட்டுகுறிப்பிட்டநபர் வெளியேஓடிய தாகவும் சம்பந்தப்பட்ட மாணவியை பலவந்தமாகக் காரினுள் போட முயற்சித்துக் கொண்டிருந்த இருவரையும் தாக்கி, பெண்ணைக் காப்பாற்றியதாகவும் கூறப்பட்டது.

சந்தேகநபர்களான வி. சோதிலிங்கம், எஸ். வேலும் மையிலும் ஆகிய இருவரும் பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டது. இம்மாதம் 15-ம்திகதி வழக்கு தாக்கல் செய்யப்படும்.

### வரவு-செலவு

## விவாதம் 10-ம் திகதி

கோட்டை, ஞாயிறு

நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா நேற்று சமர்ப்பித்த ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகிறது. தொடர்ந்து 13 ம் திகதி முதல் 17-ம் திகதி வரையும், மீண்டும் 21-ம் திகதி முதல் 23-ம் திகதிவரையும் நடைபெறும். 23-ம் திகதி வாக்கெடுப்பு நடைபெறும்.

## நூற்றாண்டு விழா

சுழிபுரம், ஞாயிறு

கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையில் கல்வி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு கலாசாலை அதிபர் திரு. சி. விசுவலிங்கம் தலைமைவகித்தார். காலை கவியரங்கும், மாலை விவாத அரங்கும் நடைபெற்றது.

### விபத்தில் மரணம்

கொழும்பிலிருந்து ஐஸ் ஏற்றிவந்த ரி.எச். பஸ்ரியன் சில்வாவின் லொறி வறக்காப்பொலைக்கு அண்மையில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததால் சோமதாஸ என்ற இளைஞன் ஸ்தலத்திலே மரணமானார். சாரதியும் கிளினரும் மயிரிழையில் உயிர்தப்பினர். லொறி பலத்த சேதமடைந்தது.

திருச்சிற்றம்பலம், கௌரவ தனதிகாரி: திருமதி எம். இரத்தினபாலசூரியர், சங்கீத பாடசாலை இணை மனேஜர்கள்: திருமதிகள் ஆர். ஜெகநாதன், எஸ். தங்கராசா, வி. அருளம்பலம். கமிட்டி அங்கத்தவர்கள்; திருமதி கே. கனகசபை, திருமதிகள் வி. குமாரசாமி, ஆர். குமாரநாயகம், டி. பொன்னம்பலம், ரி. நடராசா, எஸ். நடராசா, எஸ். ஏ. கந்தையா, பி. தர்மலிங்கம், சி. கே. பிள்ளை, சி. சிவஞானம், கே. குலசிங்கம், எஸ். பி. மயில்வாகனம், தேவி ரத்தினசபாபதி, ஆர். நமசிவாயம், டபிள்யூ, பாலேந்திரா.

## கடையில் புகுந்து கொள்ளை

புலோலி, திங்.

நள்ளிரவில் கடையொன்றினுள் புகுந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று கடையில் இருந்த முதலாளியையும் தாக்கிவிட்டுஅங்கிருந்தஅலுமாரிகளையும் அடித்து உடைத்து பணத்தையும் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டார்களாம்

கடையில் புகுந்த பயங்ர கொள்ளை கோஷ்டி ஆயுதங்களை காட்டி பயமுறுத்தி அலுமரிகளையும் அடித்து நொருக்கி அங்கிருந்த சில பொருட்களையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு மாயமாக காரில் மறைந்து விட்டதாக பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. புலன் விசாரணை நடைபெறுகிறது.

## காலமானார்

கோட்டை, ஞாயிறு

முன்னாள் அசைஸ் ஆணையாளரும் கொழும்பு மாவட்ட நீதிபதியுமான திரு. என். டி. எஸ். விஜேசேகரா நேற்று முன்தினம் காலமானார்.

இவர் அசைஸ் நீதிமன்ற பதிவாளராகவும், நீதிமன்ற சேவைகள் ஆணைக் குழுவின் காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட்டாகவிருக்கும் காலத்தில் பண்டாரநாயக்கா கொலை வழக்கையும் விசாரணை நடத்தினார்.

## திருவிழா

திருக்கோணமலையில் சேருவாவிலவிகாரை பூஜாராதனை இம்மாதம் 20-ம்திகதி ஆரம்பமாகி 28-ம் திகதி முடிவடையவிருக்கிறது. திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபாலா குணதீரா இத்தகவலைத் தெரிவித்தார்.

# ருமேனியாவில் அதிபர் நிக்ஸனுக்கு அமோக வரவேற்பு

புக்காரெஸ்ட், ஆக. 3

அமெரிக்க உலகில் எல்லா நாடுகளுடனும் நல்லுறவோடு வாழ்வதற்கு உறுதி பூண்டிருக்கிறது என்று ருமேனியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க அதிபர் நிக்ஸன் கூறியிருக்கிறார்.

ருமேனிய தலைநகருக்கு திரு. நிக்ஸன் நேற்று வந்து சேர்ந்த பொழுது அவருக்கு அமோகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான ருமேனியர்கள் வழிகள் நெடுகிலும் வரிசையாகக்கூடி அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

ருமேனியப் பத்திரிகைகள் யாவும் திரு. நிக்ஸனின் படங்களை முதல் பக்கங்களில் பெரிதாகப் பிரசுரித்திருந்தன.

திரு. நிக்ஸன் ருமேனிய அதிபர் திரு. சாசெஸ்கோவுடன் மூன்றரை மணிநேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். திரு. சாசெஸ்கோ அளித்த விருந்தின்போது திரு. நிக்ஸன் பேசுகையில், மற்ற நாடுகளுடன் அமெரிக்காவுக்கு பலவகையிலும் வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும்எல்லா நாடுகளோடும் அன்போடு உறவு வைத்துக்கொள்ளவே விரும்புகிறோம் என்றார்.

உலகில் உள்ள நாடுகள் ஒன்றையொன்று அங்கீகரித்துக் கொள்ளாது போனால் நிரந்தரமான அமைதியைக் காண்பது இயலாது என்று வலியுறுத்தினார்.

திரு. சாசெஸ்கோ பேசுகையில் உலக அமைதிகுறித்து தங்கள் ஆலோசனைகள் நடத்தியதாகவும் உலக அமைதிக்காக ஒத்துழைப்பதில் கருத்து வேற்றுமையில்லையென்றும் கூறினார்.

திரு. நிக்ஸன் இன்று லண்டனுக்குத் திரும்புகிறார். அதற்கு முன்னரும் திரு. சாசெஸ்கோவுடன் ஆலோசனைகள் நடத்துவார். லண்டனில் நிக்ஸன் தங்கவிருக்கும் ஒருசில மணித்தியாலங்களில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சனையும் சந்தித்து உலகவிவகாரங்கள் பற்றி ஆலோசனைகள் நடத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் அகிம்சைவழி நடப்பவர்கள் என்று கூறிக்கொள்ள விரும்பினால், சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவனிடம் உள்ளதற்கு அதிகமாக பொருள்களையடைய விரும்பக்கூடாது.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 20-ந் திகதி (4-8-69)


## புதிய வரவு - செலவுத் திட்டம்

ஆரவாரமற்ற, அதிர்ச்சியளிக்காத வரவு - செலவுத் திட்ட யோசனைகளைத் தயாரித்தளித்திருப்பதன்மூலமும் சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் மிகப்பெருந் தொகைப்பணம் துண்டு விழும் வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரித்ததன்மூலமும் நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா சாதனைநிகழ்த்தியிருக்கிறார். சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் ஓர் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில்ஐந்து வரவு-செலவுத் திட்டங்களையும்தயாரித்து அளித்துவரவு-செலவுத்திட்ட உரை நிகழ்த்திய ஒரே நிதி மந்திரி என்ற பெருமையையும் பெற்றிருப்பவர் இன்றைய நிதி அமைச்சர்தான்.

115 கோடி ரூபாய் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்கு நிதி அமைச்சர் பாவனைப் பொருள்கள்மீது கைவைக்கவில்லை. அதாவது அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அவர்உயர்த்தவில்லை. ஏற்கெனவே உயர்ந்துள்ள இப்பொருள்களின் விலைகளை, பொதுத்தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் உயர்த்தமாட்டார் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கக்கூடிய வரி விதிக்கப்படவில்லையாறாலும் பொதுமக்களின் பழுவைக் குறைக்கக்கூடியதாக நிதியமைச்சர் எதையும் செய்யவில்லையென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

தொலைபேசிக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் கட்டணங்களுக்கேற்ப தொலைபேசிசேவை சீராக நடைபெறவில்லை இந்நிலையில் கட்டணங்களை உயர்த்துவதால் தொலைபேசி பாவனையாளரின் அதிருப்தியைத்தான் தேடிக்கொள்ள முடியும். அழகுசாதனங்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளது நியாயமானது.

அரசாங்க ஊழியரின் சம்பளம் ஒக்டோபர் முதல் திகதி...றது. அவர்களின் குறைகள் பெருமளவில் நீங்கிவிடும். ஆயுதப்படைகளின் சம்பள விகிதமும் விரைவில் உயரலாமென எதிர்பார்க்கலாம். அரசாங்க சேவையிலுள்ளவர்களின்சம்பளம்உயர உயர விலைவாசிகளும் உயர்ந்து வாழ்க்கைச்செலவும் அதிகரிக்குமே தவிர வாழ்க்கைச்செலவு குறைவதற்கு வழியைக் காணோம். அரசாங்கசேவையிலுள்ளவர்களின் சம்பளம் உயரும்போது இதரதுறைகளிலுள்ளவர்களின் சம்பளமும் வருமானமும் உயர்வதற்கான வழிவகைகள் காணப்பட்டால் நாட்டில் பெரும்பான்மை மக்கள் மனதில் அதிருப்தியும் குறையும் ஏற்பட இடமிருக்காது.

துண்டுவிழும் 115 கோடி ரூபாயையும் சரிக்கட்டுவதற்கு புதிய வரி விகிதங்களை விதித்தும் கூட்டுத்தாபனங்களிடமிருந்தும், பாவனைப் பொருள் உதவிகள் மூலமும், வெளிநாட்டு உதவித்திட்டங்களிலிருந்தும், இலங்கை வங்கிகளிலிருந்தும் பணத்தைப் பெறுவதற்குத் திட்டமிட்டு அறிவித்திருக்கிறார். ஆனாலும் துண்டுவிழும் தொகையில் எட்டுக்கோடி நாற்பது லட்சம் ரூபாயைச் சரிக்கட்டுவதற்கு அவரால் வழிகாண முடியவில்லை. இதற்கு வேறு வழிகளை இனி மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

நமது நாடு சுதந்திரமடைந்து இருபத்தோராண்டுகளானபோதிலும் அந்நியஆட்சியினர் தமது ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டு அமைத்த பொருளாதார முறையே இன்னும் பின்பற்றப்பட்டு வருகிறது. அதாவது நமது பிரதானவிளைபொருள்களான தேயிலையையும் ரப்பரையும் தான் நமதுநாடு இன்னும் பொருளாதாரத்துக்கு நம்பியிருக்கிறது. உலகச் சந்தையில் தேயிலைக்கும், ரப்பருக்கும் வீழ்ச்சியேற்பட்டுள்ளதால் இலங்கையின் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நமது

# பியூன்களுக்கும் சமையல்காரருக்கும் சிங்கள மொழிநிர்ப்பந்தம்

# அரசகரும மொழி அமுல் பற்றி ஆட்சிமன்றத்தில் உடுப்பிட்டி எம். பி.

**சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் அரசாங்கத்தரப்பில் பதிலளித்துப்பேசியதின் ஒருபகுதி நேற்று வெளியிடப்பட்டது. அவ்வுரையின் இன்னொரு பகுதி இன்று வெளியாகின்றது.**

### காரசாரமான வாக்குவாதம்

திரு. அமிர்தலிங்கம்- துறைமுகத்தைப் பற்றி நான் சொன்னதை வாசியும்.

திரு. சிவசிதம்பரம்: இன்னுமொரு நிமிடத்தில நான் துறைமுகம் பற்றிய விஷயத்துக்கு வருகிறேன்.

சபாநாயகர்: நீர் விரும்புவதையே அவர் வாசிக்க வேண்டுமென கேட்கக் கூடாதென்றே நான் நினைக்கிறேன்.

திரு. அமிர்தலிங்கம்: அவர் வசனங்களைப் பொருத்த மற்ற முறையில துண்டித் தெடுக்கிறார்,

திரு. சிவசிதம்பரம்: நான் வசனத்தைப் பொருத்த மற்ற முறையில துண்டித் தெடுத்துக் கையாள்வதிலலை.

திரு. அமிர்தலிங்கம்: நீர் செய்தீர்.

திரு. சிவசிதம்பரம்: ஆதாரமற்ற முறையில இப்படி குற்றஞ் சாட்ட வேண்டாம். நான் முழுப்பந்தியையும் வாசித்தேன். நான் சண்டையை விட்டு ஓடிவிடுவதிலலை. வட்டுக்கோட்டை அங்கத்தவர் அதை அறிவார்.

திரு. சிவசிதம்பரம்: நான் சண்டையை விட்டு ஒடுபவனல்லன்.

சபாநாயகர்: நீங்கள் இங்கே சண்டையிடுவதை நான் விரும்பவில்லை.

திரு. சிவசிதம்பரம்: நான் சொன்னது போல் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவைச் சேர்ந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதிதான், எதிர்க்கட்சியைச் சேர்ந்த வட்டுக்கோட்டைப் பிரதிநிதிக்குப் பதிலளிப்பதற்குச் சிறந்தவர்.

தொழிலபிவிருத்தித்துறையில் இந்த அரசாங்கம் செய்துள்ள சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### மின்தறிகள்

மின்தறிகள் பல சீனாவினால் இவ்வரசாங்கத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. சென்ற அரசாங்கத்...

சீக்கிரம் நாட்டப்படுமென்று அவர் கூறுகிறார்.

### தெல்லிப்பளையில் புதிய ஆஸ்பத்திரி

புற்று நோய் தடுப்பு யந்திரம் அப்புறப்படுத்தப்பட்டது பற்றியும் சமஷ்டிகட்சி அங்கத்தவர்கள் சுகாதார அமைச்சரைக் குற்றஞ் சாட்டினார்கள். ஆனால் லட்சக்கணக்கான செலவில் தெல்லிப்பளையில் நிறுவப்பட்டுள்ள புதிய ஆஸ்பத்திரியைப் பற்றி அவர்கள் மறந்து விட்டார்களா? அந்தப் பணத்தை வழங்கியது இந்த அரசாங்கம் தான். என்ன செய்யப்பட்டுள்ளது என்பதையிட்டு நாம் திருப்தியடைய வில்லை என்பதைநாங்கள் ஒப்புக் கொள்கிறோம். முந்திய வருடங்களில் காட்டப்பட்ட உதாசீனத்தினூடே உருவிச் செல்லக்கூடிய வகையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதை ஒப்புக் கொள்ள நாங்கள் தயார். ஆனால் உண்மையில் செய்யப்பட்டுள்ளவைகளை நாம் மறக்காமலிருப்போம். அவற்றுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

அத்திவாரக் கற்களைப் பற்றிப் பேசும் பொழுது, எனது தொகுதியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சொல்ல விரும்புகிறேன். திரு. திருச்செல்வம் உள்ளூ ராட்சி மன்ற அமைச்சரா யிருந்தபோது எனது தொகு...

...டியல் படுத்திக் கூற வேண்டுமென்பதுதான்.

தீர்க்க திருஷ்டியுள்ள எவரும், இத்தகைய கூற்றறிக்கைகள் சில எப்படி நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பது பற்றிய ஞானமுள்ள எவரும் நினைத்திருக்க வேண்டிய சாதாரண விஷயம்

தங்களது தீர்க்க திருஷ்டியின் ஞான சூனியத்தை வருங்காலத்தில் நடக்கப் போவதை ஊகித்தறிய முடியாத தங்களது ஏலாத்தனத்தை மூடிமறைப்பதற்காகத்தான் அவர்கள் மற்றவர்களைக் குறை கூறுகிறார்கள். அரசாங்க ஊழியர் விவகாரத்தில் அவர்களுக்கு அவ்வளவு அக்கறை உண்டென்றால் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுடைய பிரேரணையை அவர்கள் ஏன் ஆமோதிக்கவில்லை யென்று நான் கேட்பதில் நியாயமுண்டு.

திரு. அமிர்தலிங்கம்: நீர் ஏன் ஆமோதிக்கவில்லை?

திரு. சிவசிதம்பரம்: நான் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் இருப்பதால் தான் என்னால் அதை ஆமோதிக்க முடியவில்லை.

திரு. தர்மலிங்கம்: அப்படியானல் உமக்கு அரசாங்க ஊழிர் மீது அக்கறையில்லை!

திரு. சிவசிதம்பரம்: எனக்கு அக்கறையுண்டு என்னுடைய போராட்டத்தை நன் வேறோர் இடத்தில் நடத்துகிறேன் உங்களுக்கும் தெரியும் சிரிப்பதன் மூலமாக இவ்விவகாரத்தில் உங்களது குறை [illegible]பாட்டை மறைக்க வேண்டாம். ஊர்காவற்றுறைப் பிரதி நிதியுடைய பிரேர...

இன்றுள்ள சாதாரணக் கேள்வி, பல்கலைக்கழகத்தை திருக்கோணமலையில் நிறுவுவதா அல்லது யாழ்ப்பாணத்தில் நிறுவுவதா என்பதுதான் இந்தச் சாதாரணக் கேள்வியைத்தான் நாம்.

திரு. தர்மலிங்கம்: ஹிந்து சர்வகலாசாலை இல்லையா?

திரு. சிவசிதம்பரம்: ஹிந்துப் பல்கலைக்கழகம் பற்றிய கவலை வேண்டாம். ஹிந்துப் பல்கலைக்கழகம் பற்றி நான் பின்பு கூறுகிறேன்.

அவர்களை நீண்டகாலமாகத் தெரியுமாதலால் அவர்களது பலவீனத்தையும் அவர்களது பலத்தையும், அவர்களது நோக்கத்தையும் நானறிவேன். அவர்களுக்குப் பதில் சொல்வது கஷ்டமலல.

சபாநாயகர்: கௌரவ அங்கத்தவர் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பதில் சொல்ல முடியும். அவர் அவரது பேச்சைத் தொடர வேண்டும்.

திரு. சிவசிதம்பரம்: கடந்த சில மாதங்களாக அதை நாம் திறம்படவே செய்துள்ளோம்.

இனி இதுதான் அந்த சாதாரணப் பிரச்னை. பல்கலைக்கழகத்தை திருக்கோணமலையில் நிறுவுவதா அல்லது யாழ்ப்பாணத்தில் நிறுவுவதா? இந்த நாட்டில் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்ழகக் கமிஷனும், பல்கலைக்கழகத்தை எங்கே நிறுவுவது என்ற பிரச்னை அடுத்த முறை எழும்போது பல்கலைக்கழகத்துக்கான இடம் யாழ்ப்பாணத்திலும் காலியிலும்தான் தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்தது. ஏனெனில் இயற்கையாக இன்று மட்டுமல்லாமல் இன்னுமொரு பதினைந்து வருடங்களுக்கு பெரும்பான்மையான மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்துதான் வருவார்கள். இதைக் கேள்விப்படும்போது சமஷ்டிக்கட்சி அங்கத்தவர்கள் ஆச்சரியப்படலாம் - இது பற்றி நான் வருந்துகிறேன்.

# ஐயாறன் எழுதுவது

நேற்று முதல் சிகரெட் விலை ஒரு சதம் கூடிவிட்டது. பைப் (சுக்கான்) புகையிலைக்கு வரி கூடவில்லை. பிரதமர் டட்லி சுக்கான் புகைப்பதால்தான் அதன் வரி உயரவில்லை என்று சிகரெட் புகைக்கும் நண்பரொருவர் கூறுகிறார். அப்படியிருக்குமென்று தோன்றவில்லை.

காரணம் எதுவாயினும், சிகரெட் புகைப்பவரின் வாழ்க்கைச் செலவு, இப் புதிய வரியால் ஓரளவு உயரக்கூடும். சராசரி ஒருவர் நாளுக்கு 10 சிகரெட் புகைப்பதாயின், ஒருமாதத்துக்கு மூன்று ரூபாய் அவருக்கு அதிகப்படி செலவாகும்.

அவர் அரசாங்க சிப்பந்தியாக இருந்தால், அவரை அதிகம் பாதிக்காது. அவருக்கு இரண்டு மாதங்களில் சம்பளம் கூடப்போகிறது ஆகவே கூடிய சம்பளத்திலிருந்து சிகரெட்டுக்காகும் அதிகச் செலவை அவர் சரிக்கட்டக்கூடும். ஆனல் சிகரெட் பாவிக்கும் மற்றவர்கள் என்ன செய்வது?

ஏற்கெனவே ஒவ்வொரு வருடமும் சிகரெட் விலை கூடிக் கொண்டே போகிறது. அரசாங்கத்துக்கு பணத்தட்டு ஏதும் ஏற்பட்டால் அவர்கள் முதலில் கையை வைப்பது சிகரெட்டின் மீதுதான்.

இக்காலத்தில் பள்ளிக்கூட மாணவர்களும்கூட சிகரெட் பாவித்து வருகின்றனர். அதைப் புகைப்பதால் புற்றுநோய் ஏற்படுமென்று அமெரிக்கா சிகெரட் பெட்டியிலேயே அச்சடித்து எச்சரிக்கும்படி உத்தரவிட்டுள்ளதாம். அப்படியிருந்தும் அங்கு புகைப்பது குறைவதற்குப் பதிலாக அதிகரித்துக் கொண்டுதான் வருகிறதாம்! புகைக்க வேண்டாமென்று இங்கு யாரும் கூறினால், அதை யார் கேட்கப் போகிறார்கள்.

அதன் விலையை உயர்த்தியதால், புகைக்கும் வழக்கம் குறையுமென்று அரசாங்கமும் எதிர்பார்க்கவில்லை. இதற்கான வரியை உயர்த்தியதின்மூலம் அதிக வருமானம் கிடைத்து, துண்டுவிழும் பணத்தில் ஓரளவு சரிக்கட்டலாமென்றும் நம்பியிருக்கிறார்கள்.

தங்கள் தேகசுகம் கெட்டாலும்சரி, விலை எவ்வளவு உயர்ந்தாலும் சிகரெட்பழக்கத்தை விடாமல் கைக்கொண்டுவரும் லட்சக்கணக்கான மக்களுக்கு நம் இனிப் புகைப்பதில்லையென்று தீர்மானித்திருப்பதாயின் அரசாங்கத்தின் கதி என்ன ஆகும்! ஆகவே சிகரெட்டும் அதைப் புகைக்கும் தியாகிகளும் நீடூழி வாழ்க!

0 0 0

நெடுந்தீவு — குறிக்காட்டுவான் படகு சேவை இருவாரங்களாக நின்றுள்ளதைக் கண்டித்து அத்தீவிலே பெரும் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடந்துள்ளது. நாளைக்குள்ளாக இக் கஷ்டத்தைத் தீர்க்காவிட்டால், கச்சேரி முன்பாக உண்ணாவிரதமிருக்கவும் தீர்மானித்துள்ளனர். அந்த ஊர்வலத்திலே கிராமசபை தலைவரும் உறுப்பினர்களும்கூடக் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தீவுப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர், படகுசேவை முதலிய விஷயமாகப் பல குறைகளுண்டு. இதுவரை எவ்வளவோ கூக்குரலிட்டும் அரசாங்கம் அக்குறைகளைத் தீர்க்க முற்படுவதில்லை.

இதற்குச் செலவு அதிகமாகாது. முக்கியமான இக் குறைகளைத் தீர்க்க வேண்டியது நாகரீக அரசாங்கத்தின் கடமையாகும். நிலைமை சகிக்க முடியாதபடி மோசமடைந்ததால்தான் கிராம சபையினரும் சேர்ந்து இவ் விதம்தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர், உடன் அங்கு சென்று தீவுப்பகுதி எம். பி.யையும், கிராமசபைத் தலைவரையும் கண்டு பேசி, அம்மக்களின் இச்சங்கடத்தைத் தீர்க்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்

(2-ம் கலம் பார்க்க)

## மாவை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நிறுத்தி யிருக்கிறாரென்றும், கோவில் கதவுகளைத் திறந்து உள்ளே சென்று வணங்கும் உரிமையை வழங்கவேண்டுமென்றும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் கோரியிருந்தனர்.

இம்மனு மீதான விசாரணையில் வடபகுதிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் சாட்சியமளிக்கையில் மாவிட்டபுரம் ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கிறதென்றும், தங்கள் வழிபாட்டுரிமை தடுக்கப்பட்டிருக்கிறதென்றும் பலர் தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார் மல்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...ல் கட்டணங்கள் உயர்த்து வதால் தொலைபேசி பாவனை யாளரின் அதிருப்தியைத் தான் தேடிக்கொள்ள முடியும். அழகுசாதனங்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள் ளது நியாயமானது.

அரசாங்க ஊழியரின் சம்பளம் ஒக்டோபர் முதல் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட விருக்கிறது. சம்பளக்கமிஷன் சிபார்சின்படி சம்பளம்உயர்த் தப்படுவதால் நிதிமந்திரி எதிர்பார்த்த 115 கோடி ரூபாயைவிட மேலும் சுமார் பன்னிரண்டரைக்கோடி ரூபாய் துண்டுவிழுகிறது. அரசாங்க ஊழியரின் சம்பள உயர்வை வழங்குவதற்கு ஆண்டுக்கு சுமார் பன்னிரண்டரைக் கோடி ரூபாய் அரசாங்கத்துக்குச் செலவாகும். அரசாங்க ஊழியருக்குச்சம்பளம் உயர்த்தப்படுவதால் ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களிடையே முணுமுணுப்பு ஏற்படலாமென்பதால் அவர்களின் சம்பள விகிதம்பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு விசேஷ குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது.

அரசாங்க ஊழியருக்குக் கஷ்டங்கள் இல்லாமலில்லை. இந்த வரவு-செலவுத்திட்டம் அரசாங்க ஊழியர்களுக்கு அதிர்ஷ்டம் அளித்திருக்கி

...களான தேயிலையையும் ரப்பரையும் தான் நமதுநாடு இன்னும் பொருளாதாரத்துக்கு நம்பியிருக்கிறது. உலகச் சந்தையில் தேயிலைக்கும், ரப்பருக்கும் வீழ்ச்சியேற்பட்டுள்ளதால் இலங்கையின் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நமது தேவைகளை நிறைவேற்றக் கூடியமுறையிலும் வெளிநாடுகளிலிருந்து நமக்குத் தேவையான பொருள்களை நாம்எதிர்பார்த்துக்கொண்டிராத முறையிலும் நமதுநாட்டின் அரசியல், பொருளாதார அமைப்புக்களைமாற்றியமைத்துக்கொள்ளாதவரை ஆண்டுதோறும் வரவு-செலவுத் திட்டத்தில்துண்டுவிழும்தொகை பெருமளவில் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். வெளிநாடுகளிடமிருந்து வாங்கும் கடனை நாடு எப்போது திருப்பிக்கொடுக்கும்; எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறது?

இந்நிலையில் மிகச்சிரமமான காரியத்தை எடுத்த எடுப்பில்யாரும்குறைசொல்ல முடியாதபடி, மிகச்சாதுரியமாக, ஆரவாரமில்லாமல், அமைதியாகச் சாதித்திருக்கும் நிதியமைச்சர் பாராட்டுக்குரியவர்.

## யாழ். பஸ்நிலைய..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு. வி. சுகததாசாவுக்கு அனுப்பிவைக்துள்ள தந்தியொன்றில் பஸ்சேவை இல்லாததால் வடபகுதி மக்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர் என்றும், உடனடியாக இதனைத் தீர்த்துவைக்குமாறும் கேட்டுள்ளார்.

## 150 பஸ் ஓடவில்லை 1000 பேர் வேலைநிறுத்தம்

மூன்று டிப்போக்களிலும் சுமார் 150 பஸ்கள் ஓடாமல் இருப்பதாகவும் சுமார் 1000 ஊழியர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், சுமார் 50 சாரதிகளும் கண்டக்டர்களும் வேலைக்கு வருவதால் 30 பஸ்கள் யாழ். குடாநாட்டில் சேவை செய்வதாகவும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைகள் சரியாகத் தீர்க்கப்படும்வரை தாம் வேலைக்குத் திரும்பப் போவதில்லையென்று வேலைநிறுத்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

இ. போ. ச. ஊழியர்கள் வேலைநிறுத்தம் நியாயமற்றது என்றும், சாரதிகள் அல்லாதவர்கள் பஸ் ஓடுவதாகக் கூறப்படுவது உண்மையற்றதென்றும் இ. போ. ச. முகாமையாளர் திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை தெரிவித்தார். (கா. நி.)

## கைக்குண்டு தயாரித்தார்களாம்

கல்ஹிசை, திங்கள்

கைக்குண்டுகளைத் தயாரித்ததாக ஆறு இளைஞர்கள் மஹரகம பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பழைய கொட்டாவ வீதியிலுள்ள ஒரு வீட்டிலே இவர்கள் இந்தக் கைக்குண்டுகளை தயாரித்ததாக கைது செய்யப்பட்டார்கள்.

(8ம் கலத் தொடர்ச்சி)

டும். அழுதபிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும். நெடுந்தீவு மக்கள் ஒற்றுமையாகக் கேட்கும் இந்த நியாயமான கோரிக்கை வீண் போக முடியாது.

0 0 0

உமையலாதுருவ மில்லை யுலகலாதுடையதில்லை நமையெலாமுடையராவர் நன்மையே தீமையில்லை, கமையெலா முடையராகிக் கழலடி பரவுந் தொண்டர்க்கு அமைவிலாவருள் கொடுப்பா ரையனை யாறனுர்க்கே.

-அப்பர் சுவாமிகள்

...செய்துள்ள சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

## மின்தறிகள்

மின்தறிகள் பல சீனுவினுல் இவ்வரசாங்கத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. சென்ற அரசாங்கத்தின் கீழ் இவற்றில் ஒன்றேனும் யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படவில்லை. இன்று அந்த மின்தறிகளில் ஐந்து யாழ்ப்பாணத்தில், அதிலும் நான்கு சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்களது தொகுதிகளில் நிறுவப்பட வுள்ளன என்பதை சமஷ்டிக் கட்சி அங்கத்தவர்கள் அறிவார்கள், நானு மறிவேன்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்: அது இப்பொழுது மாற்றப் படட்டும்.

திரு. சிவசிதம்பரம்: இல்லை' இதில் மாற்ற மேற்படாது.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் ஆரம்பித்து வைத்த இளைஞர் திட்டம் முதியன்காடு என்ற இடத்தில் உள்ளது. அமைச்சரவர்கள் ஆரம்பித்து வைத்த முதல் திட்டங்களில் இதுவுமொன்று என்பதை சமஷ்டிகட்சி அங்கத்தவர்கள் அறிவார்கள். அவர்தம்மால் முடிந்ததெல்லாம் செய்தார். நில அபிவிருத்தி இலாகாவின் யந்திரங்களைக் கொணர்ந்து நிலத்தை துப்பரவு செய்து அதை விவசாயத்துக்குப் பொருத்தமானதாக்கினுர் அவர். வாலிபர்களை அங்கே குடியேற்றுவதற்கு முன்னதாகவே இதை அவர் செய்தார். விவசாயத்துறையில் அவர்கள் மகத்தான பணி புரிகின்றனர்.

இனி, முதன்முதலாக பலகிராமங்களில் கிராம மின்சாரத் திட்டம் அமுலாக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்: உம்முடைய தொகுதியில்.

திரு. சிவசிதம்பரம்: டி. ஸி. ஸி. கூட்டங்களில் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலை யாரும் நோக்கினுல், கோப்பாயில் இரண்டு கிராமங்களும், உடுவிலில் ஒரு கிராமமும், காங்கேசன்துறையில் ஒரு கிராமமும் மின்சாரத் திட்டத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளதைக் காணமுடியும்'

தேசிய மயச் சேவை அமைச்சரிடம் நான் காங்கேசன்துறை முகம் விஷயமாகப் பேசியுள்ளேன். அடுத்த ஆண்டு பட்ஜட்டில் ரூபா 2 கோடி செலவாகும் திருத்தப்பட்ட திட்ட மொன்று சேர்க்கப்பட விருப்பதாக அவர் கூறுகிறுர். அத்திவாரக்கல்

...போம்.

அத்திவாரக் கற்களைப் பற்றிப் பேசும் பொழுது, எனது தொகுதியில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சொல்ல விரும்புகிறேன். திரு. திருச்செல்வம் உள்ளூராட்சி மன்ற அமைச்சராயிருந்தபோது எனது தொகுதிச்கு விஜயம் செய்து தண்ணீர் திட்டமொன்றுக்காக அத்திவாரக் கல் நாட்டினுர். ஒரு வருடமாக ஒன்றுமே நடக்க வில்லை. புதிய அமைச்சர் பதவியேற்கும் வரையில் ஒன்றுமே நடக்கவில்லை. அவர் பதவியேற்று ஆறு வாரங்களுக்குள்ளாகவே வேலை ஆரம்பிக்கப்பட்டது.

## வழக்கமான விஷயங்கள்தாம்

எனவே அத்திவாரக்கற்கள் நாட்டுவதும் அதற்குப்பின்னர் ஒன்றும் நடக்காமல் விடுவதும் சுகாதார அமைச்சைப் பொறுத்த வரையில் அப்படியொன்றும் விசித்திரமானதல்ல என்று நான் சொல்வதற்காக சுகாதார அமைச்சர் என்னை மன்னிக்க வேண்டும். பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு அமைச்சுகளிலும் நடந்துள்ள விஷயம் தான் இது.

## அரசாங்க ஊழியர்கள்

அப்புறம் அவர்கள் அரசாங்க ஊழியர்களைப் பத்றிப் பேசினுர்கள். தெளிவற்றதான திறைசேரியின் 701-ம் இலக்க சுற்று அறிக்கையின் விளைவுதான் அரசாங்கஊழியரும்உத்தியோக மொழியும் சம்பந்தமாக இன்று உருவாகியுள்ள பிரச்னைகள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை அது. இதனுல் பாதிக்கப்படும் பெரும் பகுதியானேர் மாவட்ட அடிப்படையில் பாடசாலைகளில் பியூன்களாகவும் சமையல் காரர்களாகவும் இன்னும் இது போன்ற தொழில்களிலும் அமர்த்தப்பட்டுள்ள சிறு வேலையாட்களேயாகும். அவர்கள் சிங்களம் படிக்குமாறு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். இதற்காக யாரையும் குற்றஞ்சாட்டுவதாய் இருந்தால், செனட்டர் திருச்செல்வமும் அதற்குப் பொறுப்பாளிதான் திறைச்சேரியின் 700-ம் 701-ம் இலக்க சுற்றறிக்கைகளைத் தயாரித்த மந்திரிசபை உபகுழுவில் அவரும் அங்கம் வகித்தார்.

உத்தியோக மொழி சட்டத்திலிருந்து விதிவிலக்கு செய்யப்பட வேண்டியவர்களை முறையாகப்பட்

...ட்டத்தை நன் வேருேர் இடத்தில் நடத்துகிறேன் உங்களுக்கும் தெரியும் சிரிப்பதன் மூலமாக இவ்விவகாரத்தில் உங்களது குறைபாட்டை மறைக்க வேண்டாம். ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுடைய பிரேரணையை நீங்கள் ஆமோதிக்க வில்லை. தொம்மே பிரதிநிதி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் சிற்றுண்டிச் சாலையில் வைத்து எங்களிடம் கூறியதுபோல் அவர்கள் தம்பதெனியாப் பிரதிநிதி(திரு. ஆர். ஜி. சேனநாயக்கா)யுடைய பிரேரணையை ஆமோதிக்க விரும்பாதமைக்குக் காரணம் அவர்கள் அப்பிரேரணையை விரும்பினுலும் அதைக் கொண்டு வந்த நபரை விரும்பாததேயாம். சமஷ்டிக்கட்சியும் அது போல்தான் பிரேரணையை விரும்பியது. ஆனுலும் அதைப் பிரேரித்தவரை விரும்பவில்லை. எனவே கட்டுப் பாடற்றவராக இருந்தமைக் காக அவர்கள் கீறிய கோட்டை தாண்டுபவராக இருந்தமைக்காக அவரும் தண்டனையை அனுபவிக்க நேர்ந்தது.

அப்புறம், ஊர்காவற்றுறைப் பிரதிநிதிக்குப் பாடம் புகட்டுவதற்காக வேண்டி அவரோடு போட்டியிடுவதற்கு கிளிநொச்சி அங்கத்தவர் (திரு. ரட்ணம்) அங்கே அனுப்பிவைக்கப்பட்டார்.

## திருமலையில் பல்கலைக்கழகம்

இவ்வளவையும் அவர்கள் சகித்துக் கொண்டிருந்தமைக்கு. பொறுத்துப் பார்த்தமைக்குக் காரணம் திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் கிடைக்குமென்று எதிர்பார்த்ததே என்று அவர்கள் சொல்லுகிறுர்கள். வட்டுக்கோட்டைப்பிரதிநிதியும் சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த ஏனைய பிரதிநிதிகளும் தமிழ்ப் பல்கலைக்கழகமொன்று கேட்டு சிம்மாசனப் பிரசங்கத்துக்குத் திருத்தமொன்று கொண்டுவந்தார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் பற்றிய பிரச்னையே கிடையாது, ஆனுல் இரண்டு மொழிகளில்போதனுப்பிரிவுகளைக் கொண்ட பல்கலைக்கழகம் இருக்கும் என்ற பிரதமருடைய முடிவை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு இப்போது வந்து தமிழ்ப்பல்கலைக்கழகமொன்று வேண்டுமெனக் கேட்பதற்கு என்ன உரிமையிருக்கின்றதென நான் அவர்களைக்கேட்கிறேன். இப்பிரச்னை மீது நாம் வாதிக்கவேண்டியதில்லை.

இன்னுமொரு பதினைந்து வருடங்களுக்கு பெரும்பான்மையான மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்துதான் வருவார்கள். இதைக் கேள்விப்படும்போது சமஷ்டிக்கட்சி அங்கத்தவர்கள் ஆச்சரியப்படலாம் - இது பற்றி நான் வருந்துகிறேன். சர்வகலாசாலை ஸ்தாபிககப்பட்டதிலிருந்து இதுவரை திருககோணமலையைச் சேர்ந்த எந்தப் பாடசாலையிலிருந்தாவது ஒரு மாணவரேனும் பல்கலைகழகத்துககுச் சென்றது கிடையாது. திருககோணமலையின் எந்த கல்லூரியிலிருந்தாவது ஒரு மாணவரேனும் பலகலைககழகத்துககுச் சென்றது கிடையாது. அவர்களில சிலர் யாழ்ப்பாணத்துககுப் போய் யாழ்ப்பாணக கல்லூரிகளிலிருந்து பல்கலைககழகத்துக்குப் போயிருககிறுர்கள். ஆனுல திருககோணமலையிலுள்ள கலலூரிகளிலிருந்து நேரடியாகச் சென்றது கிடையாது

திரு. தருமலிங்கம்: பேராதெனியாவிலிருந்து எத்தனை பேர் பேராதெனியாவுககுப் போகிறுர்கள்?

திரு. சிவசிதம்பரம்: அதல்ல கேள்வி.

நீர் ஏன் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமெனக் கேட்கிறீர்கள்?

சபாநாயகர்: தயவு செய்து இந்தக் குறுக்குக் கேள்விகளை நிறுத்தவும். நீங்கள் இருப்பது நீதிமன்றத்தில் அல்ல.

திரு: சிவசிதம்பரம்: ஒரு வித்தியாசம். அவர் அப்புக்காத்தாக வருவதற்கு முயன்று தோல்வி கண்டவர். நானே ஒரு அப்புக்காத்து. குறுக்குக்கேள்வியென்றுல் என்னவென்று எனக்குத் தெரியும். இந்த வித்தியாசத்தோடு நான் அவருக்குப் பதில் கூறத் தயார். எனவே இதுதான் கேள்வி. மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்கள். அவர்களது சௌகரியத்துக்காக நீங்கள் பல்கலைக்கழகத்துக்கான இடத்தைத் தெரிவு செய்யப் போகிறீர்களா அலலதுவேறு அற்பகாரணங்களுக்காக நீங்கள் அப்படிச் செய்யப் போகிறீர்களா? உங்களது வேறுகாரணங்கள்பற்றி எங்களுக்கு சந்தேகமுண்டுதான் ஏதோ சிந்தைக்கெட்டாத காரணத்துக்காக அவர்கள் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் வேண்டாமென்கிறுர்கள். இதனுல்தான் நாம் ஹிந்து பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டோம் இந்த அரசாங்கத்தின் நிதியோ அல்லது வரப்போகும்

...துண்டுவிழும் பணத்தில் ஓரளவு சரிக்கட்டலாமென்றும் நம்பியிருக்கிறுர்கள்.

தங்கள் தேகசுகம் கெட்டாலும்சரி, விலை எவ்வளவு உயர்ந்தாலும் சிகரெட்பழக்கத்தை விடாமல் கைக்கொண்டுவரும் லட்சக்கணக்கான மக்களுக்கு நம் அரசாங்கமும், நாடும்கூட நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றதல்லவா! விலை உயர்த்தியதை ஆட்சேபிது அவர்களெல்லாம்


வேறு, எந்த அரசாங்கத்தின் நிதியோ எல்லா வசதிகளும் பெற்ற பல்கலைக்கழகமொன்றை திருகோணமலையிலாவது அல்லது யர்ழ்ப்பாணத்திலாவது நிறுவுவதற்குப் போதாதென்பதை நாமறிவோம்.

(தொடரும்)

...சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் சாட்சியமளிக்கையில் மாவிட்டபுரம் ஆலயக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கிறதென்றும், தங்கள் வழிபாட்டுரிமை தடுக்கப்பட்டிருக்கிறதென்றும் பலர் தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார் மல்லாகம் நீதிமன்றத்தில் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட மாவிட்டபுரம் ஆலய தர்மகர்த்தா பின்னர் ஒப்பந்தத்தை மீறி ஆலயக் கதவுகளைப் பூட்டிவிட்டாரென்றும் கூறினுர்.

மனுவை ஏற்று மனுதாரர்கள் ஆலய உள் வீதியினுள் சென்று வணங்குவதைத் தடுக்கக்கூடாதென மாவட்ட நீதிபதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தார். (கா நி)

## பரிசு பெற்றவர்



யாழ்ப்பாண வட்டார 'சி' பிரிவு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில மொழித் திறன் போட்டியில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மாணவி தெய்வரஞ்சனி இராஜசிங்கம் பேச்சிலும் கதை சொல்லலிலும் முதல்இடத்துக்குரிய பரிசுகளைப்பெற்றுர். யாழ்ப்பாணப் பட்டின ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டியிலும் ஆங்கிலப் பேச்சில் முதல் இடத்தைப் பெற்று சான்றிதழ் பெற்றுர்.

வடமாகாண பிரிவில் ஆங்கிலத்தில் கதை சொல்வதில் இரண்டாவது இடத்தைப் பெற்று கல்வி கலாச்சார அமைச்சினுல் அளிக்கப்பட்ட சான்றிதழை வடமாநில வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org